# தமிழ்ப் பொழில்

**தமிழாராய்ச்சித் திங்களிதழ்**

**துணர் :** 59 **மலர் :** 4

## உள்ளுறை

1. **தமிழில் எதிர்மறைகள்** .... 145

வீ. ரேணுகாதேவி,
ஆய்வாளர்,
தமிழியற்றுறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்.

3. **வீரசோழிய எழுத்திலக்கணக் கோட்பாடு** .... 155

(சென்ற இதழ் தொடர்ச்சி)

பி. பெ. சுயம்பு,
ஆய்வாளர்,
தமிழியற்றுறை,
காமராசர் பல்கலைக்கழகம்,
மதுரை - 21.

3. **திருமுருகாற்றுப்படை** .... 159

திரு. அடிகளாசிரியர்.
சுவடிப்புலம்,
தமிழ்ப் பல்கலைக்கழகம்.

4. **ஒப்பிலக்கியம்** .... 163

S. செல்வகணபதி, எம். ஏ., பி. ஓ. எல். பி. எட்.,
துணைப்பேராசிரியர்,
அரசர் கல்லூரி, திருவையாறு.

5. **தொல்காப்பிய உவமவியல் காண்டிகையுரை** .... 167

பேராசிரியர். ச. பால சுந்தரம்.

6, **சங்க இலக்கியத்தில் கல்வெட்டுச் சொற்கள்** .... 180

பி. எல். சாமி, இ. அ. ப,
கலைக் களஞ்சியத்துறை,
தமிழ்ப் பல்கலைக் கழகம்,
தஞ்சாவூர்.

# தமிழ்ப் பொழில்

**கரந்தைத் தமிழ்ச்சங்கத் திங்கள் வெளியீடு**

திருவள்ளுவர் ஆண்டு — 2016

துணர்: 59 | குரோதன — ஆடி | மலர்: 4

ஜுலை — ஆகஸ்டு 1985


## தமிழில் எதிர் மறைகள்


வீ. ரேணுகாதேவி.


1. 1. 0. தமிழ்மொழியில் எதிர்மறை உணர்த்தப்பெறும் நிலையினையும், எதிர்மறை வடிவங்களையும், காலப்போக்கில் அவற்றின் கண் ஏற்பட்ட மாற்றங்களையும், எதிர்மறை வகைகளையும், எதிர்மறைக்கும் காலத்திற்குமிடையே காணப்படும் உறவினையும் கண்டறிவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்,

1. 1. 1. திராவிடமொழிகளில் உடன்பாட்டுச் சொற்களுடன் எதிர்மறையினை உணர்த்தும் கூறுகளை இணைப்பதன் வாயிலாக எதிர்மறை வடிவங்கள் ஆக்கம் பெறுகின்றன.

1. 1. 2. இலக்கண நூற்கள் சில -ஆ, -இ, -ஏ, -உம் என்னும் இடைச்சொற்கள்[1] எதிர்மறையினை உணர்த்துவதற்குப் பயன்படுவதையும், அல்-, இல்-, என்னும் அடிச்சொற்கள் எதிர்மறை வடிவங்களாகச் செயல்படுவதனையும் சுட்டி எதிர்மறை சொல்லியல் நிலையிலும், தொடரியல் நிலையிலும் உணர்த்தப் பெறும் என்பதனைக் கூறுகின்றன.

1.1.3. இலக்கண நூற்களை அடிப்படையாகக் கொண்டு இராபர்ட் கால்டுவெல் (1856, 468), பி. சா. சுப்பிரமணிய சாஸ்திரி (1934 : 174-173), ஆல்பிரட் மாஸ்டர் (1946 : 142, 150) ஜூல்ஸ் பிளாக் (1954:66), வ.அய்.சுப்பிரமணியம் (1959:34-35), மோ. இசரயேல் (1973 : 241), ச. அகத்தியலிங்கம் (1979 : 109) ஆகியோர் எதிர்மறை வடிவங்களை எதிர்மறை அடிச்சொற்கள் எனவும், எதிர்மறை உருபுகள் எனவும், இருவகைப்படுத்தி விளக்கம் தந்துள்ளனர்.

1.1.4. எதிர்மறை வடிவங்களைப் பொறுத்தமட்டில் சங்க இலக்கியங்களில் அல்-, இல்-, என்னும் இரண்டு அடிச்சொற்களிலிருந்து ஆக்கம் பெற்ற வடிவங்களும், ஆகார உறுப்பினைக் கொண்ட வடிவங்களும்,-ஏல் என்னும் பின்னொட்டும், இன்மை வடிவமும் எதிர்மறையினை உணர்த்தப் பயன்படுத்தப் பட்டுள்ளன. இன்னும் தொடரியல் நிலையிலும் எதிர்மறை உணர்த்தப்பெறுவதனைச் சங்க இலக்கியங்களில் காண முடிகின்றது.

அல் - அல்லேன் (குறுந்: 91)
இல் - இல்லா (கலி: 124)
ஏல் - சிதையேல் (நற்: 307)
ஆ - வாராமல் (புறம்: 365)
- காணாய் (புறம்: 259)

1.1.5. காப்பிய காலத்தில் சொல்லியல் நிலையில் அல்-, இல்-, என்னும் அடிச்சொற்களாலும், -ஆ-, -ஆத்- என்னும் உருபுகளாலும், இன்மை வடிவத்தாலும் தொடரியல் நிலையில் -ஓ, -ஏ என்னும் இடைச்சொற்களாலும் எதிர்மறை உணர்த்தப் பட்டுள்ளது.

அல் - அல்லம் (மணி: 10:36)
இல் - இலேன் (மணி: 5:105)
ஆ - அகலாமல் (மணி: 19:97)
ஆத் - அஞ்சாது (மணி: 25:144)
- அஞ்சேன் (மணி: 3:31)
ஓ - ஆடவர் கண்டால் அகறலும் உண்டோ (மணி 3:24)

1.1.6. பதினென்கீழ்க்கணக்கு காலத்திலும், பக்தி இலக்கிய காலத்திலும் சொல்லியல், தொடரியல் நிலைகளில் எதிர்மறை உணர்த்தப்பட்டுள்ளது. பக்திகாலத்திற்குப் பின்னர்தான் மாட்டு என்னும் அடிச்சொல் எதிர்மறையினை உணர்த்தப் பயன்படத் துவங்கலாயிற்று. இதனைப் போன்று -ஆத்- என்னும் உருபின் வருகையும் பெருகிக் காணப்படலாயிற்று.

அல் - அல்லர் (பழம்: 66:4)
இல் - இல்லது (குறள்: 119:1)
- ஆ - அருளா (கைந்: 51:2)
- ஆத் - ஒழியாது (ஏலா: 38:1)
- காணேன் (திணைமாலை: 62:2)
- ஓ - அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாள் (குறள்: 71:1)

1.1.7. இக்காலத்தமிழில் சொல்லியல், தொடரியல் நிலைகளில் எதிர்மறை உணர்த்தப்பெற்றாலும் தொடரியல் நிலை வாயிலாக எதிர்மறை உணர்த்தப்படும் பாங்கே பெரிதும் காணப்படுகின்றது.

## 1. 2. எதிர்மறை வகைகள்

1. 2. 1. எதிர்மறையினை வடிவ அடிப்படையில் பகுப்பு வடிவ எதிர்மறைகள் (segmental negatives) எனவும், மேல் பகுப்பு வடிவ எதிர்மறைகள் (subra segmental negatives) எனவும், இரு வகைப்படுத்தவாம்.

பகுப்பு வடிவ எதிர்மறைகளில் எதிர்மறை பகுப்பு வடிவங்களால் (segmental features) உணர்த்தப்பெறும். இப்பகுப்பு வடிவ எதிர்மறைகள் எதிர்மறை வேர்கள் (negative roots) எனவும், எதிர்மறை ஒட்டுக்கள் (negative affixes) எனவும் இரு வகைப்படும் எதிர்மறை ஒட்டுக்கள் முன்னொட்டாகவோ (prefix) பின்னொட்டாகவோ (suffix) அமையும். [2]

அல் - அது அல்ல
இவ் - நான் கொடுக்கவில்லை
மாட்ட் - ராதை படிக்கமாட்டாள்

எதிர்மறை வேர்கள்

அ - அமங்கலம்

-முன்னொட்டு

-ஆ - உண்ணாவிரதம்
-ஆத்- உண்ணாத கிளி

பின்னொட்டு

மேல்புகுப்பு வடிவ எதிர்மறைகளின் மேல்பகுப்பு வடிவங்களால் (subra segmental features) எதிர்மறை உணர்த்தப்படும். பொதுவாக உடன்பாட்டு வாக்கியத்தின் சுரவிசையை (intonation) மாற்றியமைப்பதன் வாயிலாகத் தமிழில் மேல்பகுப்பு வகை எதிர்மறை உணர்த்தப்படுகின்றது.

ஆமாம், போவேன் ↑ (போகமாட்டேன்)
கலாதானே வருவா ↑ (வரமாட்டாள்)

திராவிடமொழிகளின் வினையமைப்பில் காலமும் எதிர்மறையும் துணைநிலை வழக்கில் (complementary distribution) வருவதாகக் கூறுவர் அறிஞர். மூலத்திராவிட மொழியின் வினையமைப்புக்களில் கால உருபும் எதிர்மறை உருபும் இணைந்து வருமெனவும் காலப்போக்கில் தென் திராவிட, வடதிராவிட மொழிகளில் இப்பான்மை அழிந்துபடலாயிற்று எனவும் நடுத்திராவிட மொழிகள் பலவற்றின் இப்பான்மை நிலைத்து நிற்கின்றதெனவும் கருதுகின்றவர்களும் உண்டு.

1. 2. 2. இக்காலத்தமிழில் எதிர்மறை வினைகளில் கால உருபு இல்லாதிருப்பினும் தொடரில் அவை ஒரு குறிப்பிட்ட காலப் பொருண்மையில்தான் வழங்கி வருகின்றன. எதிர்மறை வினைகள் காட்டும் காலத்தின் அடிப்படையில் எதிர்மறையினை இறந்தகால எதிர்மறைகள், நிகழ்கால எதிர்மறைகள், எதிர்கால எதிர்மறைகள் என மூன்றாக வகைப்படுத்தலாம்.

**1. 2. 2. 1. இறந்த கால எதிர்மறை :**

இறந்தகால எதிர்மறை, செயவெனெச்ச வினையமைப்பும் இல்- என்னும் அடியிலிருந்து ஆக்கம்பெற்ற சொல்லும் இணைந்த தொடரமைப்பால் உணர்த்தப்படுகின்றது.

ஆசிரியர் **வரவில்லை**

நான் பாட்டு **கேட்கவில்லை**

இது தவிர சில ஒட்டுக்களாலும் இறந்த கால எதிர்மறை உணர்த்தப்படும்

செய்யாத வேலை

## 1. 2. 2. 2. நிகழ்கால எதிர்மறை :

நிகழ்கால எதிர்மறை, நிகழ்கால வினையாலணையும் பெயர் அல்லது தொழிற்பெயர் வடிவங்களுடன் இல்- என்னும் அடியிலிருந்து ஆக்கம்பெற்ற வடிவங்கள் இணைந்த தொடரமைப்பால் உணர்த்தப்படுகின்றது.

சீதா இப்போ **படிக்கறது இல்லை**

நாய் **நடக்கிறது இல்லை**

## 1.2.2.3. எதிர்கால எதிர்மறை :

உயர்திணையில் எதிர்கால எதிர்மறை செயவெனெச்சமும் மாட்ட் - என்னும் அடியிலிருந்து ஆக்கம்பெற்ற சொற்களும் இணைந்த தொடர்மைப்பால் உணர்த்தப்படுகின்றது.

கிரிஜா **பேசமாட்டாள்**

மக்கள் **பார்க்கமாட்டார்கள்**

அஃறிணையில் எதிர்கால எதிர்மறை சில ஒட்டுக்களால் உணர்த்தப்படுகின்றது. இதனைப் போன்றே கட்டளைப் பொருளில் இருதிணையிலும் எதிர்மறை சில உருபுகளால் உணர்த்தப்படுகின்றது.

நாளை பஸ் **ஓடாது**

நீ **செய்யாதே**

## 1.3. எதிர்மறையின் பண்புகள் :

1.3.1. உடன்பாட்டு வாக்கியத்துடனோ அன்றி உடன்பாட்டுச் சொற்களுடனோ எதிர்மறை அடியிலிருந்து ஆக்கம் பெற்ற சொற்களையோ அன்றிச் சில எதிர்மறை ஒட்டுக்களையோ இணைப்பதன் வாயிலாகவும் உடன்பாட்டு வாக்கியத்தின் சுரவிசையினை மாற்றியமைப்பதன் வாயிலாகவும் எதிர்மறை உணர்த்தப்படுகின்றது.

ராதா பொய் சொல்லாதே
அப்பா அதட்டிச் சொல்லமாட்டார்
நான் போவேன் ↑ (போகமாட்டேன்)

1.3.2. தமிழில் அல்-, இல்-, மாட்ட்- என்னும் எதிர்மறை வேர்ச்சொற்களும், அ-, -ஆ-, -ஆத்- என்னும் ஒட்டுக்களும் எதிர்மறை வடிவங்களாகச் செயல்படுகின்றன.

1.3.3. அல்-, இல்-, மாட்ட்- என்னும் அடிச்சொற்கள் எண், பால் உருபுகளை ஏற்று வருகின்றன. ஆயினும் இக்காலத் தமிழில் அல்-, இல்- இரண்டிலிருந்து ஆக்கம் பெற்ற வினைமுற்று வடிவங்கள் எழுவாயுடன் இயைபுகொண்டு விளங்குவதில்லை.

மூக்கின் கூர்மையான அமைப்பு அல்ல
அண்ணன் பேரில் தப்பு இல்லை
நான் குழம்ப மாட்டேன்

1 3 4. ஆல்-, இல்- என்னும் இரண்டு அடிச்சொற்களி லிருந்த ஆக்கம்பெற்ற எதிர்மறை வடிவவங்கள் பெயர், வினைகளைத் தொடர்ந்து வரும். ஆனால் மாட்டு என்னும் வடிவம் வினையினை மட்டுமே தொடர்ந்துவரும்.

இன்று மழை இல்லை
நாளை வர வில்லை
இது மரம் அல்ல
இது சாப்பிட அல்ல
மிருணா பாட மாட்டாள்

1. 3. 5. தமிழில் அனைத்து எதிர்மறைப் பின்னொட்டுக் களும் வினையடியுடன் இணைந்து அவற்றிற்குப் பின்னிடத் தனவாக அமைகின்றன.

துன்பம் வரக்கூடாது
நீ பாடாதே

1.3.6. சமஸ்கிருத மொழியிலிருந்து கடன் வாங்கப் பெற்ற எதிர்மறை முன்னொட்டு எப்போதும் பெயருக்கு முன்னிடத்த தாக அமையும்.

அமங்கலம்
அநியாயம்

1.3.7. முதல்வினையும், துணைவினையும் இணைந்து வரும் தொடர்களில் எதிர்மறை ஒட்டுக்கள் பெரும்பாலும் துணைவியுடனும், ஒரு சில சூழலில் முதல்வினையுடனும் வரும்.

கடைக்கு வந்திருக்க வேண்டாம்

நீ படிக்காவிட்டால்........

1.3.8. செய்துவாய்பாட்டு வினையெச்சம், பெயரெச்சம், நிபந்தனை வினையெச்சம், வினையாலணையும் பெயர் அமைப்புகளில் எதிர்மறைப் பொருண்மை எதிர்மறை ஒட்டுக்களால் உணர்த்தப்படுகின்றன.

வேலை செய்யாது போய்விட்டான்

என்னுடன் பேசாத கலா

ஊருக்குப் போகாவிட்டால்......

ரமா காது கேட்காதவள்

1 3.9. குறிப்பு வினைகள் பெரும்பாலும் எதிர்மறை ஒட்டுக்களை ஏற்று எதிர்மறை வினைகளாகச் செயல்படுகின்றன.

இன்று மழை வரக்கூடாது

எனக்குப் பழம் வேண்டாம்

1.3.10 இரண்டு எதிர்மறை வடிவங்கள் ஒரு சொல்லின் வரும்பொழுது அவற்றில் ஒன்று எதிர்மறைப் பொருண்மையினை இழந்துவிடுகின்றது.

வேலை இல்லாதவள்

1 3.11 ஒரே தொடரில் இரண்டு எதிர்மறைகள் வருமாயின் அத்தொடர் உடன்பாட்டுப் பொருண்மையினை உணர்த்தும்.

மக்களுக்குத் தெரியாமல் இல்லை.

## 1.4. முடிவுகள்

1.4.1. தமிழில் உடன்பாட்டு வடிவங்களுடன் எதிர்மறை வடிவங்களை இணைப்பதன் வாயிலாக எதிர்மறைப் பொருண்மை உணர்த்தப்படுகின்றது.

1.4.2. எதிர்மறையினை உணர்த்த அல்-, இல்-, மாட்டு- என்னும் அடிச்சொற்களும், அ-, -ஆ-, -ஆத்- என்னும் ஒட்டுக்களும், சுரவிசையும் பயன்படுகின்றன.

1.4.3. தமிழில் எதிர்மறைகளைப் பகுப்பு வடிவ எதிர்மறைகள் என்றும், மேல்வகுப்பு வடிவ எதிர்மறைகள் என்றும் இரு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். பகுப்பு வடிவ எதிர்மறைகள், எதிர்மறை வேர்ச்சொற்கள் எனவும் எதிர்மறை ஒட்டுக்கள் எனவும் இரு வகைப்படும். எதிர்மறை ஒட்டுக்கள் முன்னொட்டுக்கள், பின்னொட்டுக்கள் என இரு வகைப்படும்.

1.4 4. எதிர்மறை வினைகள் காட்டும் காலத்தின் அடிப்படையில் எதிர்மறைகள் இறந்தகால எதிர்மறைகள், நிகழ்கால எதிர்மறைகள், எதிர்கால எதிர்மறைகள் என்றும் பகுக்கப்படுகின்றன.

இப்பாகுபாடு காலப்பொருண்மையும், எதிர்மறைப் பொருண்மையும் ஒரே வினையமைப்பில் அமையப்பெறும் என்னும் கருத்தினை வலியுறுத்துகின்றது.

1. 4. 5. எதிர்மறை அடிச்சொற்கள் எண், பால், இட உருபுகளை ஏற்றவரினும் பெரும்பாலும் இவை எழுவாயுடன் இயைபுகொண்டு விளங்குவதில்லை.

1. 4. 6. எதிர்மறை வேர்ச்சொற்கள் வினையையும் பெயரையும் தொடர்ந்து வருகின்றன.

1. 4. 7. வினையெச்சங்கள், பெயரெச்சங்கள், வினையாலணையும் பெயர், ஆகியவற்றின் எதிர்மறையை உணர்த்த எதிர்மறை ஒட்டுக்கள் பயன்படுகின்றன.

1. 4. 8. முதல் வினையும், துணைவினையும் இணைந்து வரும் தொடரில் முதல்விளை, அல்லது துணைவிளையைத் தொடர்ந்து எதிர்மறை வருகின்றது.

1. 4. 9. ஒரு சொல்லில் இரண்டு எதிர்மறைக் கூறுகள் அமையும்பொழுது அவற்றில் ஒன்று எதிர்மறைப் பொருண்மையை இழக்கின்றது. ஒரு தொடரில் இரண்டு எதிர்மறைக்கூறுகள் அமையும் பொழுது அத்தொடர் உடன்பாட்டுப் பொருண்மையைச் சுட்டுகின்றது

1. 4. 10. தொடரியல் நிலையில் இடைச்சொற்களால் உணர்த்தப்படும் எதிர்மறைப் பொருண்மை மேல்வகுப்பு வடிவ

எதிர்மறை அமைப்புக்குள் அடங்கும்; அவற்றில் எதிர்மறையை உணர்த்துவது சுரவிசையே அன்றி இடைச்சொற்கள் அல்ல.

**அடிக்குறிப்புகள்**

1. இக்காலத்தமிழ் நாவல் சிறுகதைகளில் உரையாடல்களில் ஆங்கில எதிர்மறைச் சொற்களும் பயன்படுத்தப் படுகின்றன.

why not ... பாதர்

2. இலக்கண நூலார் -ஆ, -ஓ, -உம் என்னும் இடைச் சொற்கள் எதிர்மறையினை உணர்த்துவதாகக் கருதினாலும் எதிர்மறையினை உணர்த்துவது சுரவிசையே அன்றி இடைச் சொற்கள் அல்ல.

**துணை நூற்பட்டியல்**


1. Agesthialingam, S., "Negatives in old Tamil", I. L., Vol. 40, No. 2 (1979), pp. 59-77.
2. Andronov, M. S., "The Negatives in Dravidian - A Comparative Study", J. T. S. Vol. 11 (1977), pp. 106-120
3. Athithan, A., "Tense and Negation in Dravidian", T P., Vol. 58. No. 8 (1985), pp. 369-373
4. Bloch, Jules, The Grammatical Structure of Dravidian Languages, Deccan College, Poona. 1954.
5. Caldwell, R., A Comparative Grammar of the Dravidian or Soutn - Indian Family of Languages, University of Madras, Madras, 1856.
6. Israel, M , The Treatment of Morphology in Tolkappiyam, Madurai University, Madurai, 1973.
7. Master, Alfred, "The Zero Negative in Dravi-, dian", T. P. S., (1946), pp. 137-155.

8. Renganathan, D., "Negatives in Old Tamil," AIUTTA., Vol. 11 No. 2 (1979), pp. 328-331.

9. Subrahmanya Sastri, P.S., History of Grammatical Theories in Tamil and their Relation to the Grammatical Literature in Sanskrit, Journal of Oriental Research, Madras, 1934.

10. Subrahmanyam, P. S., Dravidian Verb Morphology (A Comparative Study), Annamalai University, Annamalai Nagar, 1971.

11. Subramaniam, V. I., "Negatives", T. C., Vol. VIII, No. 1 (1959), pp. 32-43.

12. Varadarajan, M., "The Negative Participles in Tamil", AORM., Vol. XX No. 1 (1965), pp. 1-6.

# வீரசோழிய எழுத்திலக்கணக் கோட்பாடு

பி. பெ. சுயம்பு

(சென்ற இதழ் தொடர்ச்சி)

## அடிக்குறிப்புக்கள்

1. தலைமை அல்லது பன்மை (மிகுதி) பற்றியே வெவ்வேறானவை கலந்ததன் தொகுதிக்குப் பெயர் அமையும் (தொல்காப்பியம், கிளவியாக்கம், 49.)

2 வீரசோழியத்தில் ஆய்தம், குற்றியலிகரம், குற்றியலுகரம் பற்றிய குறிப்புக்களும் இடம் பெற்றுள்ள போதிலும் அது எழுத்துக்களை முதல், சார்பு எனப் பகுத்துக் கூறவில்லை.

3. நகரம் ஞகரமாகத் திரித்த 'ஐஞ்ஞூற்றொடு' (செயயுளியல், 97) என்னும் சொல் தொல்காப்பியத்தில் இடம் பெற்றுள்ள போதிலும் அது அண்ணவினமாதலைக் குறிப்பிடவில்லை. நன்னூல் (124) ஐகாரத்தை அடுத்து வரும் நகரம் ஞகரமாதலை மட்டும் கூறுகின்றது.

4. நாழி முன் 'உரி' வரும்போது 'ழி' கெட்டுப் பின்னர் டகரம் தோன்றும் (நாழி + உரி > நா + உரி > நா + ட் + உரி > நாடுரி) என இந்நூற்கள் கூறுகின்றன.

5. பேராசிரியர் அறிஞர் கோ. விசயவேணுகோபால் பௌத்த சமயத்தவரான புத்தமித்திரர், வடமொழியிலுள்ள பௌத்தசமயக் கருத்துக்களைப் பயிலும் தமிழ் பௌத்த மாணவருக்கு வடமொழி அறிவும் வடமொழியாளரான பௌத்த ஆசிரியர்கட்குத் தமிழ்மொழி அறிவும் வேண்டுமாதலால்,இருசாராருக்கும் பயன்படத்தக்கதாக வீரசோழியம் இயற்றப்பெற்றிருக்கலாம் என்ற கருத்தினை அருளினார்.

## துணைநூற்கள்

1. வீரசோழியம் (பெருந்தேவனார் உரையுடன்), கழக வெளியீடு, 1970

2. தொல்காப்பியம், நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட் வெளியீடு, 1981.

3. நன்னூல் மூலமும் விருத்தியுரையும்,
கழக வெளியீடு, 1971.

4. நேமிநாதம்,
கழக வெளியீடு, 1969.

5. இலக்கண விளக்கம்,
கழக வெளியீடு, 1973.

6. சண்முகம், செ. வை.,
எழுத்திலக்கணக் கோட்பாடு,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 1980.

7. சுப்பிரமணியம், ச வே.,
வீரசோழியம், தமிழ்ப்பதிப்பகம், சென்னை, 1979.

8. Vijaya Venugopal, G.,
Modern Evaluation of Nannul (eluttatikaram),
Annamalai University, 1968.

## மாற்று இருதய அறுவைச் சிகிச்சை

நம் வீட்டிலுள்ள ஒரு சாமானில் - உதாரணமாக சைக்கிளில்–உறுப்பு பழுதுபட்டுவிட்டால், அதைக் கழற்றி விட்டு, வேறொன்றை வாங்கி மாட்டிவிடுகிறோம். இதே போல, நம் உடம்பிலுள்ள ஓர் உறுப்பு-கண், கால், கை பழுது பட்டுவிட்டால் அறுவைச் சிகிச்சை மூலம் வேறொரு கண், கால், கையைப் பொருத்திக்கொள்ள முடிகிறது. ஆனால், மனித வாழ்வுக்கே முக்கியமான இருதயம் பழுதுபட்டுவிட்டால் என்ன செய்வது? அதற்கு மாற்று கிடைக்குமா? கிடைத்தாலும் சரிவர இயங்குமா? என்கிற ஐயம் எழக்கூடும். ஆனால், மருத்துவ விஞ்ஞானம் இந்த ஐயத்துக்கும் இடமில்லாது செய்துவிட்டது கடந்த 20 ஆண்டுகளாக மாற்று இதய அறுவைச் சிகிச்சை சிறிதும் பெரிதுமாகச் சில நாடுகளில் நடந்துவருகிறது. இந்தியாவிலும் இந்த முயற்சி 1961-இல் தொடங்கிற்று. தொடக்கத்தில் விலங்குகளிடத்து (பூனையிட மிருந்து நாய்க்கு) மாற்று இருதய அறுவைச் சிகிச்சை செய்யப் பட்டது. இதைச் செய்தவர்கள் பம்பாயிலுள்ள எட்வர்டு அரசர் நினைவு மருத்துவமனையைச் சார்ந்த டாக்டர் சென், டாக்டர் பருல்கர், டாக்டர் ஷம்சி ஆவர். இவ்வகை அறுவைச் சிகிச்சை இதற்குமுன் அமெரிக்காவில் இருமுறை நடந்திருக் கிறது. இந்தியா இரண்டாவது நாடு. பின்னர், 1968 செப்டம்பரில் இருதயம் பழுதுபட்ட ஒரு மனிதருக்கு மாற்று இருதய அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டது. ஆனால், அவரது நுரையீரல் கோளாறு காரணமாக அவர் சீக்கிரமே இறந்துவிட்டார். எனினும், மருத்துவ உலகின் இந்த மகத் தான சாதனையில் இந்தியாவும் இடம் பெற்றுவிட்டது மகிழ்ச்சிக்குரியதாகும்.

அமெரிக்காவில் மாற்று இருதய அறுவைச் சிகிச்சை மிகச் சாதாரணமாகி விட்டது ஆண்டுக்கு 75,000 அமெரிக்கர்கள் மாற்று இருதயம் பெற வரிசையில் நிற்கிறார்கள்; ஆனால் 2000 பேருக்குத்தான் கொடுக்கமுடிகிறதாம். இருதயம் முதலிய மனித உறுப்புகளை மருத்துவமனைகளுக்குத் தருதற் காக அமெரிக்காவில் ஒரு சிறுநிறுவனம் உள்ளது. மாற்று இருதய அறுவைச் சிகிச்சைக்கு சுமார் 12 லட்சம் ரூபாய் ஆகுமாம். ஆனால் இந்தியாவில் இதை ரூ. 6000 – த்திலிருந்து '7,000 -க்குள் முடித்துவிடலாம் என்கின்றனர். இங்கே குறுக்கே நிற்பது பணம் இல்லை, சட்டந்தான், இந்தியச் சட்டம் ஒன்றின்படி, இறந்துபோன 'பிணத்திடமிருந்து' தான் இருதயத்தை அகற்ற

முடியும். அப்படி அகற்றும்போது, இருதயம் செயல்படுவது நின்றுபோய்விடுமாம். அமெரிக்காவில் இப்படிப்பட்ட சட்டம் இல்லை. விபத்துக்குள்ளாகி ஒருவர் இறந்த உடனேயே, அவரது உறுப்புக்கள் ஒவ்வொன்றையும் அகற்றிவிடலாம்; கடைசியாக இருதயம். ஒருவர் இறந்த பிறகும் சிறிது நேரம் இருதயம் துடித்துக்கொண்டிருக்குமாம். அந்தத் துடிப்பு அடங்குவதற்குள் அதைப் பொருத்திவிடலாம். இந்த மாற்று இருதய அறுவைச் சிகிச்சைக்கு 1 மணி நேரந்தான் தேவைப்படுகிறது. (முன்பு 3 மணி நேரம் தேவைப்பட்டது). இவ்வகைச் சிகிச்சைக்கு ஆளானவர்களில் 80% நன்றாக வாழ்கிறார்கள்.

மாற்று இருதயம் பொருத்திக்கொண்ட முதல் இந்தியர் ஒருவர் நம்மைப்போலவே வாழ்ந்துகொண்டிருக்கிறார். இவருக்கு அமெரிக்காவில் பென்சில்வேனியாவிலுள்ள மில்டன் ஹெர்ஷே மருத்துவ மையத்தில் மாற்று இருதயம் பொருத்தப்பட்டது. உடலாலும் மனதாலும் சுறுசுறுப்புடன் இருப்பதாக அவர் சொல்லியுள்ளார். பெல் நிறுவனத்தில் பெரிய அதிகாரியாகப் பணியாற்றும் திரு. மாதவராவ்தான் அந்த மாற்று இருதயத்துடன் வாழும் மனிதர்.

இந்த அறுவைச் சிகிச்சைக்குரிய நோயாளி பல கடுமையான மருத்துவப் பரிசோதனைகளுக்கு உட்படவேண்டும். புதிய இருதயத்தை இவரது உடல் ஏற்றுக்கொள்ளுதற்குரிய விதத்தில் சைக்ளோஸ்போரின் (Cyclosporine) என்கிற மருந்து உட்செலுத்தப்படும் இது மிக விலையுயர்ந்த மருந்து. (இம்முரான், ஸ்டெரியோட்ஸ் - Immuran & Steriods – மாற்று மருந்துகள்) இருதயம் மாற்றப்படும்போது, நோயாளி இருதய-நுரையீரல் இயந்திரம் ஒன்றோடு இணைக்கப்படுவார். இந்த இயந்திரம் இருதயத்தின் வேலையைச் செய்யும். பிறகு, இருதயத்துக்கு இரத்தத்தைக்கொண்டு செல்லும் நரம்புகளும், நுரையீரலுக்கு இரத்தத்தைக்கொண்டு செல்லும் நுரையீரல் சார்ந்த தமனிகளும் துண்டிக்கப்படும் பின்னர், பழுதுபட்ட இதயம் அகற்றப்படும்; அந்த இடத்தில் புதிய இருதயம் பொருத்தப்படும். மருத்துவர் தம் கையாலேயே தையல் போட்டு மூடிவிடுவர். மருத்துவர் வேலை முடிந்தது.

டிக்-டிக், டிக்-டிக் ........இதோ, புதிய இருதயம் இயங்கத் தொடங்கிவிட்டது.

*"நன்றி, அறிவியல் பண்ணை, தமிழ்ப் பல்கலைக் கழகம்"*

அமரர்கண் முடியும் இலக்கியமா?
மக்கட்கண் முடியும் இலக்கியமா?

திரு. அடிகளாசிரியர்.

## தோற்றுவாய்

அறிஞர் உலகம் இன்றுவரை புலவராற்றுப்படையாகிய திருமுருகாற்றுப்படைக்குத் தொல்காப்பியர் இலக்கணவிதி கூறவில்லை என்றும், புறத்திணையியலில் கூத்தர் முதலானவர்க்குக் கூறப்படும் ஆற்றுப்படை விதியினையே இதற்கும் கொள்ள வேண்டும் என்றும் கருதி வருகின்றது. இக்கருத்துப் பொருந்துமா என்பதை ஆராய்வதே இக் கட்டுரையின் நோக்கம் என்க.

## அமரர்கண் முடிவது

தொல்காப்பியப் புறத்திணையியலில் பாடாண் திணையைக் கூறும் நூற்பா ஒன்று

"அமரர்கண் முடியும் அறுவகை யானும்
புரைதீர் காமம் புல்லிய வகையினும்
ஒன்றன் பகுதி ஒன்றும் என்ப" (21)

என்பதாகும். இதற்கு இளம்பூரணர்,

"அமரரிடத்தே முடியும் அறுவகையினும் புரைதீர் காமம் புல்லிய வகையினும் அவற்றின் ஒரு கூற்றின் பாகுபாடு பாடாண் திணை யாதற்குப் பொருந்தும் என்பர் புலவர்" என்று பொழிப்புரை கூறிவிட்டு, அவ்வுரையுள் அமரரிடத்தே முடியும் அறுவகை எவை? என்பதை விளக்குமிடத்து.

அவை, "கொடிநிலை, கந்தழி, வள்ளி, புலவராற்றுப்படை, புகழ்தல், பரவல் என்பனவாகும்" என்று உரை கூறுவர்.

இளம்பூரணர் 'அமரர்கண் முடியும் அறுவகை' என்பதற்கு இவ்வாறு விளக்கி எழுதுவதற்கு ஏதாவது சான்று உண்டா? என்பதைக் கருதி ஆராய்ந்த பொழுது, புறப்பொருள் வெண்பா மாலைப் பாடாண் படல நூற்பாப் பகுதி

"அமரர்கண் முடியும் அறுவகை யாகிய
கொடிநிலை கந்தழி வள்ளி குணஞ்சால்

புலவரை அவர்வயிற் புகழ்ந்தாற்றுப் படுத்தல்
புகழ்ந்தனர் பரவல் பழிச்சினர்ப் பணிதல்''

என்று கூறுவதைக் கண்டேன்.

இப்புறப்பொருள் வெண்பாமாலைப் பகுதி தொல்காப்பியர் 'அமரர்கண் முடியும் அறுவகையானும், என்று தொகுத்துக்கூறிய பொருளை விரித்துக் கூறுவதாக அமைந்திருத்தலை அறிந்து, தொல்காப்பிய உரையினையும் தொல்காப்பியத்தையும் ஆராய்ந்து பொருள் துணிவு செய்வதற்குப் புறப்பொருள் வெண்பா மாலையும் சான்றாகும் என்று அறிஞர் கூறி வருவதை எண்ணி உவப்புற்றேன்.

## நச்சினார்க்கினியர் கூறும் உரை

அடுத்து, இப்பகுதிக்கு நச்சினார்கினியர் எவ்வாறு உரை கூறுகின்றார் என்பதையும் பார்க்க விரும்பினேன்.

அவர், (அறுவகை) "அமரர்கண்ணே வந்து முடியும் எனவே, அமரர் வேறு என்பதும், அவர்கண்ணே வந்து முடிவன வேறென்பதும் மெற்றாம். அவை முனிவரும், பார்ப்பாரும், ஆனிரையும், மழையும், முடியுடைய வேந்தரும் உலகுமாம், இவை தத்தஞ் சிறப்புவகையான் அமர்சாதிப் பால என்றல் **வேதமுடிவு**, என அறுவகைக்கு விளக்கந்தந்திருந்தார்.

அவர், வேதமுடிவு என்று கூறினாரேவொழிய. வேதத்துள் இன்னபகுதியில் முனிவர் முதலான ஆறும் அமரர்கண் முடிவதாக ஒருங்கு கூறப்பட்டுள்ளதென்பதை எடுத்துக்கூறி விளக்கினாரில்லை.

## நச்சர் உரையால் விளைந்த குழப்பம்

நச்சினார்க்கினியர் தன்னானொரு பொருள் கருதிக் கூறிய இவ்வுரையால் சில குழப்பங்கள் விளைந்துவிட்டன. அவை என்னையெனின்,

அமரர்கண் முடியும் அறுவகையுள் ஒன்றாகத் தொல்காப்பியராலும், இளம்பூரணராலும் ஐயனாரிதனராலும், கருதப்பட்ட புலவராற்றுப் படையாகிய திருமுருகாற்றுப்படைக்கு மக்கட்கண் முடியும் ஒதுக்கிடமே கிடைப்பதாயிற்று.

எதனாலெனின்? தொல்காப்பியர் முதலான சான்றோர் கருத்தினைத் தெளிவாகப் புரிந்து கொள்ளாத நச்சினார்க்கினியர் அமரர்கண் முடியும் அறுவகைக்கு

'வேதமுடிவு' என்று சான்று காட்டி வேறு உரை வகுத்து விட்டனர். அதனால் அமரர்கண் முடியும் அறுவகையுள் புலவராற்றுப் படைக்கு இடமில்லையாயிற்று. அதற்கு இடம் வேண்டுமே எங்கே தரலாம் என்று அவர் கருதினார்: கூத்தராற்றுப்படை முதலியவற்றைக்கூறும் பகுதியிலேயே இதற்கும் இடம் ஒதுக்கி விடுவோம் என்று முடிவு கட்டினார். அதனால்,

"கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறார்க்கு அறிவுறீஇச்
சென்று பயனெதிரச் சொன்ன பக்கமும்" (புறத். 30)

என்று ஒரு பொருள் கூறும் பகுதியை,

"கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
பெற்ற பெருவளம் பெறார்க்கு அறிவுறீஇச்
சென்று பயனெதிரச் சொன்ன பக்கமும்"

என்று பிரித்து, இப்பகுதி கூத்தர் முதலியோர் ஆற்றுப்படைக்கு இலக்கணங் கூறுவதாகவும்.

"ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறார்க்கு அறிவுறீஇ
சென்று பயனெதிரச் சொன்ன பக்கமும்"

என்று பிரித்து, இப்பகுதி புலவராற்றுப் படையாகிய திருமுருகாற்றுப் படைக்கு இலக்கணங் கூறுவதாகவும் அமைத்துக் கொண்டார்.

இவர் இவ்வாறு செய்த பொருந்தாவுரையால், அமரர்கண் முடியும் அறுவகையுள் ஒன்றாகவைத்தெண்ணத்தக்க தெய்வ இலக்கியமாகிய திருமுருகாற்றுப்படை மக்கட்பகுதியுள் ஒதுக்கிடத்தைப் பெற்று மதிப்பிழக்கலாயிற்று.

தமிழறிஞரும் புலவராற்றுப்படைக்குத் தனித்த இலக்கண விதியில்லை போலும் கூத்தராற்றுப்படை முதலியவற்றிற்குக் கூறிய இலக்கண விதியே இதற்கும் அமையும் போலும் என்று கருதுவாராயினர்.

தொல்காப்பியரே, பின்னர்

"கொடிநிலை கந்தழி வள்ளி யென்று
வடுநீங்கு சிறப்பின் முதலான மூன்று"

என்று கூறுவதால் அமரர்கண் முடியும் அறுவகையுள் இவை முதலான மூன்று என்பதைக் கருதியுள்ளார் என்று தெரிகின்றது.

தொல்காப்பியத்தின் மூன்று பாலுள் முன்னர் எழுத்தும், அதனைவிடச் சொல்லும், அதனைவிடப் பொருளும் சிறந்த தாகலின், பொருட்பால் உணர்ச்சி மிகவும் நுணுகி அறியத்தக்க தென்பதை அறிஞருலகம் உணர்ந்து கொள்ளல் வேண்டும்.

# ஒப்பிலக்கியம்

S. செல்வகணபதி.

அறிவியல் தாக்கத்தால் இலக்கியத் திறனாய்வுத் துறையில் ஏற்பட்ட வளர்ச்சி நிலைகளில் ஒப்பிலக்கியத் திறனாய்வும் ஒன்று. ஒப்பிலக்கியம் என்பது சங்க இலக்கியம், நீதி இலக்கியம்,பக்தி இலக்கியம் போலத் தனி இலக்கியவகை அல்ல. இது விளக்கமுறைத் திறனாய்வு, வரலாற்றுமுறைத் திறனாய்வு போன்று ஒரு திறனாய்வு வகையே. இலக்கியத்தை ஆராயும் ஒருவகை அணுகுமுறையே ஒப்பிலக்கியம். இச்சொல்லுக்குள் அப்படி ஒரு விளக்கத்தினைக் காணமுடிய வில்லை என்பது ஒரு குறைபாடே.

ஒப்பீட்டுத்துறை இலக்கணம், சமயம் போன்ற துறைகளில் வெகு நாட்களுக்கு முன்பே பின்பற்றப்பட்டு வந்தது. இலக்கியத்தற்த இத்துறையின் வருகை மிகவும் பிந்தியதே. இத்துறை இலக்கியத்தில் வெகு நாட்களுக்கு முன்பே காலெடுத்து வைத்திருந்தது. அது இன்று நாம் கூறும் ஒப்பிலக்கியமாகத் திகழவில்லையே தவிர, ஒப்பிலக்கியத்தின் முதற்படியான இலக்கிய ஒப்பீடாகத் திகழ்ந்திருந்தது. அன்று ஒப்பியல்துறை இன்று நாம் கூறுவது போல இலக்கியத் தன்மை காணும் போக்கில் அமையாமல் தரம் காணும் போக்கில் அமைந்திருந்தது. மேலும் அன்று தீர்ப்புமுறைத் திறனாய்வாக அமைந்திருந்தமையால் பலரின் மனக் கசப்பிற்கு ஆளாகி மேலும் வளரமுடியாமல் நீரின்றிக் கூம்பி நிற்கும் செடியாகக் காட்சி தந்தது. தமிழ் இலக்கியத்தைப் பொறுத்த வரையில் அறிவியல் தாக்கத்தாலும் பிறமொழித் தாக்கத்தாலும் ஏற்பட்ட ஒரு புதுத்துறைதான் ஒப்பிலக்கியத் துறை எனலாம்.

ஒப்பிலக்கியம் என்ற தொடர் ஒப்பு + இயல் + இலக்கியம் என்ற முக்கூட்டுச் சொல்லடியாகத் தோன்றியது. இலக்கியத்தில் காணும் ஒப்பீட்டிற்கு அறிவியல் முறையில் தீர்வுகாண்பது என்பது இதன் பொருள். இலக்கியம் உணர்ச்சியின் வெளிப்பாடு. அறிவியல் என்பது உணர்வு நிலைக்குட் படாமல் உண்மைநிலை காணும் அமைப்பு. அறிவியல் ஆய்வின் உணர்வடிப்படையில் ஆய்வும், அவ்வுணர்வின் வெளிப்பாடான கற்பனைக்கும் வேலையில்லை. இலக்கியமோ உணர்ச்சி, கற்பனைகளின் பெட்டகம். இந்நிலையில் இலக்கியத்தை அறிவியல் கண் கொண்டு ஆராயலாமா?

என்ற வினா எழும்புவது இயற்கை. முரண்பட்ட போக்கு இருக்கும்போது ஒருமைப்பாடு காணமுடியுமா? இதற்கு விடை தருவது மிகவும் அவசியமானதொன்றே. இலக்கிய அனுபவம் என்பது வேறு, இலக்கியக்கல்வி என்பது வேறு. இலக்கியத்தினை அனுபவிக்கும்போது அறிவியல் நிலை தேவை இல்லை. அறிவியல் பார்வையில் இலக்கியத்தை அறிய முடியுமே தவிர அனுபவிக்கமுடியாது. இலக்கியக் கல்வி என்பது வெறும் அனுபவம் மட்டுமல்ல. இலக்கியத்தை வளர்க்க. தன்மைகளை உணர தேவைப்படும் துறை. பொருளின் தன்மையை உணர்த்துவது அறிவியல். இதனை வள்ளுவர்

எப்பொருள் எத்தன்மைத்து ஆயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு. (குறள் 355)

என்றும்

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு. (குறள் 423)

என்றும் கூறுவர்.

ஒன்றன் உண்மைத்தன்மை கூறல் அறிவியலாகும்.ஒப்பிலக்கியத்துறை இலக்கியத்தை அனுபவிப்பதற்கும், உண்மைநிலை உணர்வதற்கும் உரியதுறை. அனுபவத்தைவிட தன்மை காணல் இதில் முக்கியபங்குபெறுகின்ற காரணத்தால் அறிவியல் சார்புடைய ஆய்வு ஈண்டு மேற்கொள்ளப்படுகின்றது. அறிவியல்துறையின் மூக்கிய பண்புகளான தன்மை காணல், தற்சார்பின்மை, நம்பகம், உண்மைகளைத் தெளிவாகவும் விளக்கமாகவும் கூறல், காரண காரிய ஆய்வு, பிறப்பு முறை ஆய்வு போன்றன ஒப்பிலக்கியத்துறையிலும் பயன்படுத்தப் படுகின்றன.

உலக வழக்கில் ஒப்பிடுதல் என்பது ஒரு வணிகமுறை வழக்கு. எந்த ஒரு பொருளை வாங்கும்போதும், விற்கும் போதும் ஒப்பீடு முக்கியமான இடம் பெறுகின்றது இலக்கணம் சமயம் போன்ற துறைகளில் ஆதிக்கம் செலுத்திய இத்துறை இன்று இலக்கியத்திலும் ஆட்சி செய்து வருகிறது. அறிவியல், கலையியல் போன்ற துறைகளில் ஒருவகை மனப்பான்மையை நாம் காண்பதுபோல மொழில் வேறுபட்டு விளங்கும் இலக்கியத்துறையிலும் ஒருசில மனப்பான்மையைக் காணும் அவாவின் குழந்தைதான் ஒப்பிலக்கியம். அறிவியல் உலகப்

பொதுச் சொத்தாவது போல இலக்கியமும் உலகப் பொதுச் சொத்தாக வேண்டும். இதனை ஒப்பிலக்கிய அறிஞர் இப் போலைட்தெயின் 'ஒப்பிலக்கியம் இறுதியில் உலக இலக்கியக் கோட்பாட்டிற்கு நம்மை இட்டுச் செல்லுதல் வேண்டும்' என்கிறார்.

இலக்கியம் மனித உள்ளங்களின் திரைப்படம். மனித இனம் மொழியால் இனத்தால், பண்பாட்டால் பலகூறுகளாகத் திகழ்வது போல இம் மனிதனால் படைக்கப்படும் இலக்கியங் களும் மொழியால், பண்பாட்டால் வேறுபட்டுத் திகழ்கின்றன. அவ்வந் நிலத்திற்குரிய பண்பாட்டுக்கூறுகளின் பெட்டகமாக தேசியப் பண்புகளை உணர்த்துவனவாக அமைகின்றன. தனித்தனி தேசியப்பண்புகளைக் கொண்ட இலக்கியங்கள் உலக இலக்கியப்போச்கில் ஒருலக மனப்பான்மையுடன் நடைபோட முடியுமா என்ற வினாவை எழுப்பும். இதற்கு விடை கூறுவது அவ்சியமான ஒன்றே சிலம்பிலும் பெரியபுராணத்திலும் தமிழ்த் தேசிய இயல்புகளைக் காண்கின்றோம். இத்தேசியப் பண்பு களைப் போற்றும்போது ஓர்உலகமனப்பான்மை தடைப்படு கிறது.எனவே ஓர் உலக மனப்பான்மைகாண தேசியப் பண்பு களை இழக்க வேண்டுமா? என்றால் ஒப்பு இலக்கியம் தேசியப் பண்புகளையும் இழக்கச் சொல்லவில்லை.அதே நேரத்தில் ஓர் உலக நோக்கிற்கும் நம்மை இட்டுச் செல்கின்றது. ஆல்பர்டு கையார்டு கூறுவது போல 'ஒப்பிலக்கியம் என்பது பல்வேறு தேசிய இலக்கியங்களிடையே காணப்படும் ஒன்றுக்கொன்று அமையும் தாக்கங்களைப் பற்றியதாகும்" தேசியப் பண்பு களும் சிதைவு படாமல் உலகக் கோட்பாட்டிற்குநம்மை இட்டுச் செல்லும்.

பால்வான்தீகம் என்ற ஒப்பிலக்கிய அறிஞர்கூறும் கருத்தும் ஈண்டு சிந்திக்கத்தக்கது. ஒப்பிலக்கியம் என்பது வெவ்வேறு இலக்கியங்களிடையே ஒன்றுக்கொன்றுள்ள உறவு நிலைகளைக் காண்பதாகும்.' என்கிறார். வெவ்வேறு இலக்கியங்களிடையே உள்ள உறவு நிலை என்று கூறும்போது ஒருமொழிக்குள்ளே உள்ள வெவ்வேறு இலக்கியங்களிடையே உள்ள உறவா? அல்லது இருமொழி இலக்கியங்களில் உள்ள உறவா? அல்லது பல்வேறு மொழி இலக்கியங்களிடையே உள்ள உறவா? அல்லது ஒரே தன்மையுள்ள பன்மொழி இலக்கியங்களிடையே உள்ள உறவா? அல்லது தன்மைகள் பலவாயினும் கால இட எல்லைக்குட்பட்ட இலக்கியத்தில் உள்ள உறவா? எனப் பல்வேறு வினாக்கள் எழும்புகின்றன.

இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட இலக்கியங்களிடையே உள்ள இடைத்தொடர்பு பற்றிப்பேசுவது ஒப்பிலக்கியம் எனப் பிரெஞ்சுநாட்டு அறிஞர்கள் கூறுகின்றனர். எனவே ஒப்பீடு ஒரு மொழிக்குள்ளும் அமையலாம். பல்வேறு மொழிக ளிடையேயும் அமையலாம். ஒரே பண்பு கொண்ட இலக்கியங் களிடையேயும் அமையலாம் ஒத்த அல்லது மாறுபட்ட பண்புகள் கொண்ட இலக்கியங்களிடையேயும் அமையலாம். இவ்வாறு ஒப்பிடும்போது சமுதாயம், வரலாறு, உளவியல், உயிரியல் போன்ற துறைகளின் தாக்கங்களைப் பற்றியும் அமையலாம் உறவுடைய மொழிகளிடையே உள்ள இலக்கியங்களில் புகுந்தது எது? பெற்றது என்ன? மூலம் எது? தாக்கம் பெற்றது எது? ஏன்? போன்ற நிலைகளிலும் ஆய்வினை மேற்கொள்ளலாம். அமெரிக்க நாட்டு ஒப்பிலக்கிய அறிஞர்கள் மேலும் ஒப்பீட்டுத் துறையின் எல்லையினை விரிவு படுத்தி எந்த ஒரு இலக்கியத்தையும் அது உறவுடையதாயினும், அல்லதாயினும் ஒப்பிடலாம் ஆனால் முருகியல் உணர்வை வெளிக் கொணர்வதாக அது அமைய வேண்டும் என்றனர்.

அரும்பு போல் தோன்ற ஆரம்பித்த ஒப்பிலக்கியத்துறை இன்று இலக்கிய உலகில் பெரிதும் வரவேற்கப் படுகிறது. இன்று படிப்படியாக வளர்ந்து கல்லூரிப் பாடத்திட்டத்திலும் ஆய்வுத் துறையிலும் பெரும்பங்கு வகித்து வருகின்றது. இப்போக்கு மேன்மேலும் வளருமேல் ஒருலக இலக்கிய ஒருமைப்பாடு காணும் நாள் மிக அருகிலே உள்ளது எனலாம்.

---

**கட்டுரையாளர்க்கு ....**

**தாங்கள் தமிழ்ப்பொழிலுக்கு அனுப்பும் ஆய்வுக்கட்டுரையை முழுநீளத் (Fool scap) தாளில், அடிக்குறிப்புகள் அவ்வப் பக்கத்தின் கீழ் அமையுமாறு தெளிவாகத் தட்டச்சுச் செய்து முதல் இரண்டு படிகளை அனுப்பியுதவுக**

---

# தொல்காப்பிய உவமவியல் காண்டிகையுரை

ச' பாலசுந்தரம்.

**பாயிரவுரை :**

ஒரு பொருளை மொழி வாயிலாகப் புலப்படுத்தும் முறைகளுள் உவமம் நனிசிறப்புடையது. ஒருபொருளைக் கண்கூடாகக் காட்டுவதினும் அதனை உவமவாயிலாக எடுத்துக் கூறுவது வலியுடையது என்பதனான் சிறந்த புலமையும் பரந்த அறவுமுடையார் தாம் அறிவுறுத்த விரும்பும் பொருளை உவமத்தாற் கூறுதலை மேற் கொண்டனர்.

உவமம் தான் கருதியாங்குப் பொருளைப் புலப்படுத் துவதோடு தன் அறிவாற்றலையும் பண்பாட்டினையும் நாகரிகத்தையும் உணர்வுகளையும் கேட்போர்க்குப் புலனாக்க வல்லதாகும்.

உவமத்தின் ஆற்றலையும் பயனையும் தேர்ந்துணர்ந்த தொன்னூலோர் அகமும் புறமுமாகிய ஒழுகலாறுகளைப் புலப்படுத்தும் செய்யுளுக்கு இணையாக உவமத்தைப் போற்றிக்கொள்வாராயினார்.

எழுவகைத் திணைகளையும் இருவகைக் கைகோளினையும் செய்யுளுறுப்பாகக் கூறியதொல்காப்பியர் தொல்லோர் தம் நெறி விளங்க

> உள்ளுறை யுவமம் ஏனையுவம மெனத்
> தள்ளாதாகும் திணையுணர்வகையே (அகந்-50)

என உவமத்தினைப் பொருளைப் புலப்படுத்துங்கருவியாகக் கூறி அதன் இயல்புகளை வரைந்தோதுவாராயினார்.

உவமமானது கெய்யுளொடு ஒருங்கிணைந்து சிறப்புநலன் முதலாகியவையேயன்றி மெய்ப்பாடுகளையும் நிலைக்களனாகக் கொண்டு தோன்றுதலான் உவமவியலை மெய்ப் பாட்டியலின் பின்னும் செய்யுளியலின் முன்னுமாக அமைத்துக் கூறுகின்றார் ஆசிரியர்.

இடைக்காலத்தே இலக்கண நூல்களைச் செய்த ஆசிரியன்மார் மெய்ப்பாடுகளையும் ஆகுபெயர் முதலாய

குறிப்பு மொழிகளையும்,பொருள்கோளையும் முரண் தொடை முதலாயவற்றையும், நோக்குமுதலாய செய்யுளுறுப்புகளையும் வேறுபட வந்த உவமத் தோற்றங்களையும் உள்ளுறை உவமத்தினையும் செய்யுட்கு அணி செய்வனவாகக் கொண்டு வடமொழி அலங்கார நூல்களைப் பின்பற்றி நூல் செய்து போந்தனர்.

தொல்காப்பியத்துள் கூறப்படும் உள்ளுறையுவமம் ஏனையுவமம் என்னும் பொருளிலக்கணப்பகுதியை அணியிலக்கணங் கூறுவதாகக் கருதி உவமை என்னும் அணியிலிருந்தே பிற அணிகள் யாவும் விரிந்தனவாதலின் அவற்றையெல்லாம் அடக்கி இவ்வாசிரியர் உவமயியல் கூறுவதாக மயங்குவர் பலர்.

தமிழ் இலக்கணம் யாவும் வடமொழி இலக்கணங்களை அடிப்படையாகக் கொண்டு வரையப்பட்டவை எனக் கருதுவார்க்கும் அதற்கேற்ப ஆய்வுரைகளைக்கூறுவார்க்கும் தமிழிலக்கணத்தின் தொன்மையினையும் தொல்காப்பியத்தின் நுண்மையினையும் எடுத்துக்கூறித் தமிழனது தனித்தன்மையை ஏற்கச்செய்வதென்பது ஒரு மேட்டிற் குநீர்பாய்ச்சுதலை ஒக்குமாதலின் அதனை எதிர்காலத்து வரும் நடுவுநிலை ஆய்வாளர் பொறுப்பாக்கி விடுதலே இன்றைக்குச் செய்யத் தகுவதாகும்.

இனி, தொல்காப்பியர் உவமத்தினைப் பொருளிலக்கணத்தின் சிறந்ததொரு கூறாக அமைததுணர்த்துவதனை

உள்ளுறையுவமம் ஏனையுவமமெனத்
தள்ளதாகும் திணையுணர் வகையே (அகத் -50)

உள்ளுறை தெய்வம் ஒழிந்ததை நிலனெனக்
கொள்ளு மென்ப குறியறிந் தோரே (அகத்- 51)

உள்ளுறுத் திதனொடு ஒத்துப்பொருள் முடிகென
உள்ளுறுத் திறுவதை உள்ளுறை யுவமம் (அகத் - 51)
ஏனையுவமம் தானுணர் வகைத்தே (அகத் - 52

என வரும் அகத்திணையியற் சூத்திரங்களானும்

நோயும் இன்பமும் இருவகை நிலையிற்
காமங்கண்ணிய மரபிடை தெரிய
... ... ... ... ... ... ... ... ...

இருபெயர் மூன்றும் உரியவாக
உவம வாயிற் படுத்தலும் உவமம்
ஒன்றிடத் திருவர்க்கும் உரியபாற் கிளவி (பொருள்-2)
இறைச்சிதானே உரிப்புறத் ததுவே (பொருள்-33)
இறைச்சியிற் பிறக்கும் பொருளு மாருளவே
திறத்தியன்மருங்கின் தெரியுமோர்க்கே (பொருள்-34)
அன்புறுதகுந இறைச்சியுட் சுட்டலும்
வன்புறை யாகும் வருந்திய பொழுதே (பொருள்-35)
உடனுறை உவமம் சுட்டுநகை சிறப்பெனக்
கெடலரும் மரபின் உள்ளுறை ஐந்தே (பொருள்-45)

எனவரும் பொருளியற் சூத்திரங்களானும்

கிழவி சொல்லின் அவளறி கிளவி (உவம-26)
தோழிக்காயின் நிலம் பெயர்ந்துரையாது (உவம-27)
கிழவோற்காயின் உரனொடுகிளக்கும் (உவம-28)
ஏனோர்க்கெல்லாம் இடம் வரைவின்றே (உவம-29)
இனிதுறு கிளவியும் துனியுறு கிளவியும்
உவமமருங்கிற் றோன்றுமென்ப (உவம-30)
கிழவோட்குவமம் ஈரிடத் துரித்தே (உவம-31)
கிழவோற் காயின் இடம் வரைவின்றே (உவம-32)
தோழியும் செவிலியும் பொருந்து வழிநோக்கிக்
கூறுதற் குரியர் கொள்வழியான (உவம-33)

எனவரும் உவமவியற் சூத்திரங்களானும் பிறவற்றானும் அறியலாம்.

மற்று உவமம் - உவமை என்னும் சொற்கள் தம்முற் பொருள் வேறுபாடுடையனவாகும். உவமம் என்பது உவமிக்கும் பொருளேயும் உவமை என்பது அதன் தன்மையையும் குறிப்பன வாகும். அவற்றால் விளக்கம் பெறுவது பொருளாகும். உவமத்தை வடநூலார் உபமானம் என்றும் பொருளை உபமேயம் என்றும் கூறுவர்.

உவமம் என்பது சொல்லப்படும் பொருளை விளக்கம் செய்யக் காட்டாக வருவது. அதனான் விளக்கம் பெறுவது பொருள். அவ்இரண்டற்கும் உரிய பொதுத்தன்மையே உவமை எனப்படும். உவமம் பொருள் இவற்றின் பொதுத்தன்மையைத்

தொடர்பு பகுத்திக்காட்டும் சொல் உவமச்சொல்லாகும்; உவமச்சொல்லை உவம உருபு என வழங்குவர். அஃதாவது -:

'பவளம்போற் செந்துவர்வாய்' என்னும் தொடருள் பவளம் என்பது உவமம். வாய் என்பது பொருள். செந்துவர் என்பது உவமை. போல் என்பது உவம உருபு. இங்ஙனம் ஆசிரியர் வேறுபடுத்து ஓதுவதனை ஓராத உரையாசிரியன்மார் பலவிடத்தும் மயங்குவாராயினர். திரிபுணர்ச்சியான் உவமா என்னும் வடசொல்லே உவமை என வந்ததாகப் பலர் மயங்குவர். உவமை என்பது உவமப் பொருளின் தன்மையைக் குறிக்கும் என்பதை

உவமத் தன்மையும் உரித்தென மொழிப
பயனிலை புரிந்த வழக்கத் தான் (உவம—26)
உவமையும் பொருளும் ஒத்தல் வேண்டும் (உவம—27)

என் ஆசிரியர் தெளிவுபடுத்தலான் அறியலாம்.

உவமப் பொருள் உவமத்தன்மை உவமச்சொல் (உருபு) மூன்றும் பொருளை (உவமேயத்லத) விளக்கி நிற்கும் காரணத்தான் அம்மூன்றையும் உவமம் என்னும் குறியீட்டான் வழங்குதல் நூலாசிரியன்மார் மரபாகும். அவற்றை இடம் நோக்கி உணர்தல் வேண்டும்.

மெய்ப்பாடு உரிப்பொருளின் கூறுகிய பண்பையும் செயலையும் பற்றிச் செய்யுளுள் அமைந்து உணர்வுப் பொருளைப் புலப்படுத்தலின் அதனைச் செய்யுறுப்பாகவும் உவமம் முதல்கரு உரி என்னும் திணைக்குரிய பொருளைத் தோற்றுவித்து நிற்றலின் செய்யுள் போலத் திணையுணர் வகையாகவும் நூலோர் ஓதுவாராயினர்.

இருவகைக் கைகோள் பற்றி நிகழும் அகஒழுக்கம் ஒத்த கிழவனும் கிழத்தியுமாகிய தலைமக்களைப் பொருளாகக் கொண்டு நடத்தலான், அவர் தம் உணர்வுகளையும் செயல் களையும் புலப்படுத்துங்கால் அவரை தாமே புலப்படுத்தலும் தோழி செவிலி கண்டோர், பாங்கர் முதலாய அகத்திணை மாந்தரால் புலப்படுதலும் என அப்புலப்பாடு வகைப்பட்டு நிகழ்தலான் அவ்வவர் தம் கூற்றுக்களின் அடிப்படையில் உவம இலக்கணம் அமைவதாயிற்று. மெய்ப்பாடு அதற்குத் துணையாகவும் நிலைக்களனாகவும் அமைவதாயிற்று. இதனை

நோயும் இன்பமும் இருவகை நிலையிற்
காமங்கண்ணிய மரபிடை தெரிய
எட்டன் பகுதியும் விளங்க ஒட்டிய
உறுப்புடையதுபோல் உணர்வுடையதுபோல்
மறுத்துரைப்பதுபோல் நெஞ்சொடு புணர்த்தும்
சொல்லா மரபின வற்றொடு கெழிஇச்
செய்யா மரபிற் றொழிற்படுத் தடக்கியும்
அவரவர் உறுபிணி தமபோற் சேர்த்தியும்
அறிவும் புலனும் வேறுபட நிறீஇ
இருபெயற் மூன்றும் உரியவாக
உவம வாயிற் படுத்தலும் உவமம்
ஒன்றிடத் திருவர்க்கும் உரியபாற்கிளவி (பொரு 2)

என்றும்,

இனிதுறு கிளவியும் துனியுறு கிளவியும்
உவமமருங்கிற் றோன்று மென்ப (உவம 36)

என்றும் ஆசிரியர் கூறு மாற்றான் அறியலாம். அவ்வாற்றான் அகத்திணை மாந்தருள் உவமங்கூறுதற்குரியாரையும் அவர் கூறத்தகும் முறைமையையும் இவ்வுவமவியுலுள் விளங்க விதிப்பாராயினர்.

இனி இவ்வியலுள் அகத்திற்கும் புறத்திற்கும் பொதுவாக நிகழும் ஏனையுவமத்திற்குரிய இலக்கணங்களை முதற்கண் கூறி அகத்திணைக்குச் சிறப்பாக வரும் உவம இலக்கணங்களையும் உவமங்கூறுவதற்குரிய மாந்தரையும் அவர் கூறும் முறைமையும் கிளந்துகூறி இறுதியாக உவமம் பற்றிய சில பொது வியல்புகளையும் புறனடையும் தொகுத்து ஓதுகின்றார்.

**உவமவியல்**

திணையுணர்வகையாகிய உவமத்தின் இலக்கணங்களைத் தொகுத்துக் கூறலின் இஃது உவமவியல் என்னும் பெயர்த்தாயிற்று.

உவமமாவது ஒருவர் ஒரு பொருளைத் தெளிவாகப் புலப்படுத்தக் கருதி அப்பொருளின் தன்மையை நன்கு பொருந்தியுள்ளதாகத்தான் கருதி மேற்கோளாகக் கொள்ளும் பொருளாம். இயல் என்பது இலக்கணத்தையும் படலத்தை யும் ஒருங்குணர்த்தி நின்றது.

**நூல்**

சூ 1. வினைபயன் மெய்யுரு என்ற நான்கே வகைபெற வந்த உவமத் தோற்றம்

கருத்து : உவமத்தின் வகையும் தொகையும் கூறுமுகத்தான் அது வெளிப்பட்டுத் தோன்றுமாறு கூறுகின்றது.

பொருள் : வகைபெறுதலான் வந்த உவமத்தின் தோற்றமாவது வினையும் பயனும் மெய்யும் உருவும் என்று சொல்லப்பட்ட நான்காம், ஏகாரம் தேற்றம்

என்றது : உவமத்தின் வெளிப்பாடு பொதுவகையான் இந் நான்கு வகைப்படும் என்றவாறு.

1. வினையாவது : ஒருவினைமுதலின் தெரிநிலையும் குறிப்புமாக நிகழும் தொழிற்பாடு அல்லது செயற்பாடு.

2. பயனாவது : ஒருவினைமுதலின் செயற்பாடு காரணமாக எய்தும் பயன்பாடு.

3. மெய்யாவது : சினையும் முதலுமாக அறியப்படும் ஒரு பொருளின் வடிவு அல்லது பிழம்பு.

4. உருவாவது : ஒரு பொருளின் வண்ணமும் குணமும் சுவையும் அளவும் பிறவுமாகிய பண்புகள்

வண்ணத்தின் வடிவின் அளவின் சுவையின் என்று,
அன்ன பிறவும் ... ... ... பண்பு (சொல் - 416)

என்றதனான் வடிவும் பண்பாக அடங்குமால் எனின் ? ஆண்டு வடிவென்றது ஒருபொருளின் பண்பாகக் கிடக்கும் நெடுமை குறுமை வட்டம் கோணம் முதலியவற்றையாம். ஈண்டு அப்பண்புகளையுடைய உறுப்போடு கூடிய பொருளை. அதனான் ஆசிரியர் வடிவென்னும் வாய்ப்பாட்டாற் கூறாமல் 'மெய்' என்னும் குறியீட்டாற் கூறுதலின் அடங்காதென்க.

எ - டு. :- 1. "அரிமா வன்ன அணங்குடைத்துப்பின்
திருமாவளவன்." என்பது வினையுவமம்

அரிமா அணங்குதலை ஒப்ப அணங்கும் தொழிலன் என்பதாம்.

2 "மழைவிழை தடக்கை வாய்வாளெவ்வி"

என்பது பயனுவமம் (விழை - உவம உருபுச்சொல்) மழை துப்பார்க்குத் துப்பாய் வழங்குதல் ஒப்பத் துய்ப்பதற்கு உரியவற்றை யெல்லாம் வழங்குங் கையன் என்பதாம்.

3. "வேய் மருள் பணைத்தோள்" என்பது மெய்யுவமம். (மருள்-உவம உருபுச் சொல்)வேய்திரண்டு சமனாக விளங்குதல் ஒப்பத்திரண்ட தோள் என்பதாம்.

ஈண்டு வேய் என்றது அதன் ஒருபகுதியை என்க. இஃது சினைக்குச்சினை வடிவுபற்றி வந்த மெய்யுவமம்.

"செந்தீ ஒட்டிய செஞ்சுடர்ப்பருதி" என்பது முதற் பொருட்கு முதற்பொருள் வடிவுபற்றி வந்த மெய்யுவமம் [ஒட்டிய என்பது உவம உருபிடைச்சொல்]

4. "தாமரைபுரையும் காமர் சேவடி" இது வண்ணம் பற்றி வந்த உருவுவமம்.

"தளிர்புரையும் திருமேனி" இது மென்மைக் குணம் பற்றி வந்த உருவுவமம் "யானையனையவர் நட்பொரீஇ" என்பதுமது.

"பால்போலும் இன்சொல்" என்பது சுவைபற்றி வந்த உருவுவமம்

"தெம்முனையிடத்துச் சேயகொல்" என்பது அளவுபற்றி வந்த உருவுவமம் [இன்-உவமஉருபுச்சொல்]

வினைமுதலாய இந்நான்கும் பல திறப்பட்டு வருமென்பது தோன்ற "வகைபெறவந்த" என்றார். அஃதாவது

"கடைக்கண்ணுற் கொல்வான்போல் நோக்கி" (கலி-51) என்பது கொல்லுவான் நோக்குதல் போல் நோக்கி என்றவாறு

"விசும்புரிவது போல் வியலிடத் தொழுகி
மங்குல் மாமழை தென்புலம் படரும்" (அகம்-24)

என்பது மங்குல் மாமழை விசும்புதோலுரிவது போல இயங்கி என்றவாறு.

"கொன்றன்ன இன்னா செயினும்" என்பது கொன்றால் எய்தும் துயரன்ன இன்னா என்றவாறு. பிறவும் இவ்வாறு வகையுற்று வருமாற்றினையெல்லாம் ஓர்ந்துணர்ந்து கொள்க.

சூ-2 : விரவியும் வரூஉம் மரபின என்ப.

கருத்து:- மேற்கூறிய நான்கும் பற்றிய தொரு இயல்பு கூறுகின்றது.

பொருள்: வினைமுதலாக மேற்கூறிய உவமப் பொருளின் தோற்றம் தனித்தனிவருதலேயன்றி ஒருபொருளின் கண் இரண்டு முதலாக விரவியும் வரும் இலக்கணத்தன என்று கூறுவர் புலவர்.

விரவுதற் கொத்த பொருள் உவமமாக வருமிடத்தன்றி யாண்டும் எல்லாம் விரவிவாரா என்பது விளங்க விரவியும் என்றார். உம்மையான் அவை தனித்தனி வருதலே பெரும் பான்மை என்பது புலனாம்.

எ-டு :- "செவ்வானன்னமேனி அவ்வான்
இலங்குபிறையன்ன விலங்குவால் வையெயிறு"

இதன்கண் செவ்வானன்ன மேனி என்பது வண்ணமாகிய உருப்பற்றித் தனித்து வந்தது. விலங்குவால்வையெயிறு" என்பது வடிவும் உருவும் பற்றி விரவி வந்தது. காந்தள், அணிமலர் நறுந்தாதூதும் தும்பி கையாடுவட்டிற்றோன்றும் (அகம்—108) என்பது வினையும், மெய்யும் உருவு பற்றி விரவி வந்தது.

"மரபின' என்றதனுன் ஒரு பொருளை விளக்கப் பல உவமங்கள் வருதலும் ஒன்றனது தன்மை பிரிதொன்றின்கண் விரவிவருதலும் பிறவும் கொள்ளப்படும்.

எ-டு :- "மாமலை யணைந்த கொண்மூப் போலவும்
தாய்முலை தழுவிய குழவி போலவும்
தேறுநீர்ப் புணரியொடு யாறுதலை மணக்கும்".

எனவும்

"ஆய்தூவி அனமென அணிமயிற் பெடையெனத்
தூதுணம் புறவெனத்துதைந்த நின் எழில் நலம்"

எனவும், ஒன்றற்குப் பல உவமம் வந்தன. இவற்றை நிரல்பட வந்த உவமத் தோற்றம் என்பார் பின்னர்.

'தேன் போலும் இனியமொழி" என்பது நாவிற்குரிய சுவை செவிக்குஏற்றிக் கூறப்பட்டது. பிறவும் இவ்வாறு வருவன வற்றை ஓர்ந்துணர்ந்து கொள்க.

சூ. 3. உயர்ந்ததன் மேற்றே உள்ளுங்காலை.

கருத்து : உவமத்திற்குரியதொரு மரபு கூறுகின்றது

பொருள் : உவமத்தின் மரபினைக் கருதுங்கால் அஃது உயர்ந்த பொருளின் மேலதாகும் என்று கூறுவர் புலவர்.

அஃதாவது: உவமிக்கப்படும் பொருளினும் (உவமேயத்தினும்) உவமப்பொருளின்கண் உவமத்தன்மை உயர்ந்துள்ளதாக வேண்டும் என்றவாறு.

எ.டு : அரிமாவன்ன அணங்குடைத்துப்பின்
திருமாவளவன்'' எனவும்
''மாரியன்ன வண்கைத் தேர்வேளாய்'' எனவும்
''முழவுறழ் பணைத்தோள்'' எனவும்
''தாமரைபுரையுங் காமர்'' சேவடி எனவும்

வரும்.

மேற்காட்டியவற்றுள் பொருளினும் உவமத்தின்கண் உவமத்தன்மை மிக்கு நிற்குமாறு கண்டுகொள்க. இனிக்,

கட்டிலிணக்கும் இழிசினன் கையது
போழ்த்தூண்டூசியின் விரைந்தன்று மாதோ
ஊர்த்தரவந்த பொருநனொடு
ஆர்புனை தெரியல் நெடுந்தகைபோரே [புற - 82]

என இழிந்த பொருள் உவமமாக வந்ததால் எனின்? அன்று போழ்த்தூண்டு ஊசியின் விரைவு மற்றுள்ள பொருளின் விரைவினும் மிக்கதாகலின் உவமத் தன்மை உயர்ந்துள்ளமையான் உயர்ந்ததன் மெற்றேயாமென்க.

''உள்ளுங்காலை'' என்றதனான் உவமத்திற்கு வேண்டுவன கற்பித்து உயர்ந்ததாக்கிக் கோடலுமாமென்க

எ. டு :- மாகவிசும்பிற்றிலகமொடு பதித்த
திங்களன்ன நின்முகம் [அகம் - 253]

என வரும்.

சூ. 4. சிறப்பே நலனே காதல் வலியொடு
அந்நாற் பண்பும் நிலைக்கள மென்ப

கருத்து:- உவமங்கூறுதற்கு அடிப்படைப் பொருள்கள் ஆமாறு கூறுகின்றது.

பொருள்: ஒருவர் ஒருபொருளை விளக்கப் பிறிதொரு பொருளை உவமமாக்கிக் கூறுதற்கு அடிப்படை அப்பொருளின் கண் அமைந்துள்ள சிறப்பு நலன் காதல் வலி ஆகியஅந்நான்கு பண்புகள் எனக்கூறுவர் புலவர்.

இந்நான்கொடு கிழக்கிடு பொருளும் நகை முதலாய மெய்ப்பாடுகளும் காரணமாகி வருதலின் நான்கே எனத் தெற்றேகேரம் கொடாது இவை சிறப்புடையன என்று

சுட்டுதற்கு அந்நாற் பண்பும் என்றார். ஏகாரமும் ஒடுவும் எண்ணுப்பொருளன.

சிறப்பு, நலன், வலி, என்பவை அப்பொருளின்கண் அமைந்துள்ள பண்புகள் காதல் என்பது கூறுவோன் அப்பொருளின் கண்கொண்டுள்ள பேரன்பு.

1. சிறப்பாவது : கருதி மகிழத்தக்க உயர்வு

எ-டு :- முரசு முழங்குதானை மூவரும் கூடி
அரசவையிருந்த தோற்றம் போலப்
பாடல்பற்றிய பயனுடை எழாஅல்
(பொருள்–54 56)

எனவரும். மூவேந்தரும் ஒழுங்கு இணைந்துறைதல் அரிதாக நிகழ்தலின் சிறப்புடைத்தாயிற்று. அவ்வுமத்தான் கூத்தும் இசையுப் வாச்சியமும் ஒருங்கொத்து நிகழ்கின்றமையைப் புலப்படுத்தலின் பாடலின் சிறப்பு உணர்த்தப்பட்டவாறு கண்டுகொள்க.

2. நலனாவது : வனப்பு முதலிய கவினுறு பண்புகள்.

எ - டு. :- ஓவத்தன்ன இடனுடை வரைப்பின் (புற - 25)

இதன்கண் புனையப் பெறும் ஓவியத்தை உவமங்கூறியவதனான் வளமனையின் செயற்கையழகு புலப்படுமாறு கண்டு கொள்க.

3. காதலாவது: தன்னலம் விழையாத பேரன்பு

எ - டு. ;- என்கைக் கொண்டு தன் கண்ணொற்றியும்
தன்கைக்கொண்டென் நன்னுதல் நீவியும்
அன்னைபோல இனிய கூறியும் (நற் - 28)

இதன்கண் கைம்மாறு கருதாத அன்னையை உவமங் கூறியதனுன் தலைவனது பேரன்புலனுதலைக் கண்டுகொள்க.

4. வலியாவது : மாற்றருந்துப்பு

எ· டு :- அரிமா அன்ன அணங்குடைத்துப்பின்
திருமாவளவன்

இதன்கண் அரிமாவினை உவமங் கூறியதனுன் வளவனின் பிற பண்புகளினும் மிக்க அவனது வலிமை புலனுதல் காண்க.

சூ. 5. கிழக்கிடு பொருளொடைந்துமாகும்.

கருத்து :- இதுவுமது.

பொருள்: உவமங் கூறுதற்கு நிலைக்களமென மேற் கூறிய நான்குமேயன்றிக் கிழக்கிடு பொருளொடு கூடி ஐந்தாக வருதலுமாகும் எனக் கூறுவர் புலவர்.

கிழக்கிடுதல் = தாழ்வுறல் — இதனைக் கிளைஇய குரலே கிழக்கு வீழ்ந்தனவே (குறு-337) என்பதனுன் அறிக.

இதனான் தாழ்ந்த பொருளும் உவமமாகக் கூறுதற்குரிய நிலைக்களனாக வருமென்பதாயிற்று. ஈண்டுப் பொருளென்றது பண்பினைச் சுட்டி நின்றது. எனவே மேற்கூறிய நான்கும் உயர்வு கருதி நிற்கும் என்பது புலனாம்.

எ-டு :- "அரவு நுங்கு மதியின் துல்லுளி கரப்ப" எனவும்
"உள்ளூதாவியின் பைப்பய நுணுகி" எனவும் வரும்.

உவமிக்கப்படும் பொருட்கண் கிடக்கும் இவ் ஐவகைப் பண்புகளும் உவமங் கூறுதற்கு நிலைக்களமாதல் போலச் சுவையுணர்வுகளும் உவமந் தோன்றுதற்குக் காரணமாக அமைதலான் எண்வகை மெய்ப்பாடுகளும் உவமங் கூறற்கு நிலைக்களமாதலைப் பின்னர் கூறுவார்.

சூ. 6. முதலும் சினையுமென்றாயிருபொருட்கும்
நுதலிய மரபின் உரியவை உரிய

கருத்து : உவமங் கூறுதற்குரியதொரு மரபு கூறுகின்றது.

பொருள் : உவமங்கூறுமிடத்து, முதற்பொருள் சினைப் பொருள் எனப்பாகுபடும் அவ்விரு பொருட்கும் தொன்னூலோர் சுருதிக்கூறிய இலக்கணமரபினான் வருதற்குரியவை உரியவாகும்.

என்றது : உவமங் கூறுமிடத்து முதற்பொருளுக்கு முதற் பொருளும் சினைப்பொருளுக்குச் சினைப் பொருளுமாக வருதலேயன்றி உவமத்தன்மை ஒத்து அமையுமிடத்து அவை பிறழ்ந்து வரினும் "தகுதியும் வழக்கும் தழீ இனவாக வழங்கி வருமாயின் கொள்ளப்படும் என்றவாறு

வழுவின்றி அமையும் தொடர்மொழியாக்கம் பற்றிய மரபுகளைக் கூறும் கிளவியாக்கத்துள்

செப்பினும் வினாவினும் சினைமுதற் கிளவிக்கு
அப்பொருளாகும் உறழ்துணைப் பொருளே

[கிளவி]

எனக் கூறிப் பின்னர்,அவை ஒரோவிடத்துப் பிறழ்ந்துவரினும் அவை மரபுபற்றி வந்தனவாயின் வழுவென்று களையப்படா என்பதனைத்

தகுதியும் வழக்கும் தழீஇயின வொழுகும்
பகுதிக் கிளவி வலரநிலையின்றே (கிளவி)

என இலக்கணக் கூறினாராகலின் (இச்சூத்திரத்தின் மெய் யுரையை எமது சொல்லதிகார உரையுட் கண்டுகொள்க) அங்ஙனம் தகுதியும் வழக்கும் பற்றி வருமென்பார். "நுதலிய மரபின்" என்றார். ஆண்டு முதலும் சினையும் பிறழ்ந்து வருங்கால்" உவமையும் பொருளும் ஒத்தல்" வேண்டு மாகலான் ஒவ்வாதன உரியவாகா என்பது விளங்க "உரியவை உரிய" என்றும் கூறினார்.

"நுதலிய" என்றது கருதிக் கூறிய என்றவாறு. அதனான முதலும் சினையு மெனப்பகுத்தற்கு ஏலாதனவற்றைச் சான்றோர் வழங்கியவாறு கொள்க என்றவாறாயிற்று. அஃதாவது

"விசும்பினன்ன" சூழ்ச்சி என்றவழி விசும்பு என்னும் பொருளும் சூழ்தல் என்னும் தொழிலும் முதற்பொருள் எனக் கோடலும்

"பூவமன்றன்று சுனையுமன்று" என்றவழி சுனையை முதற்பொருளெனக் கொள்ளாமல் சுனையுள் பூத் தோன்றிய இடத்தை நோக்கிச்சினையாகக்கருதிக் கோடலுமாம். இவ்வாறு வருவன பிறவுமாம்.

எ-டு:- "வரைபுரையும் மழகளிற்றின்" (புறம் 38)

என்பது முதலுக்கு முதலே வந்த உவமத்தொடர்

தாமரைபுரையும் காமர் சேவடி (குறுந் கடவுள்)

என்பது சினைக்குச்சினையே வந்த தொடர்

நெருப்பின் அன்ன சிறுகட்பற்றி (குறு 190)

என்பது சினைக்கு முதல் உவமமாக வந்த தொடர்

அடைமறை ஆயிதழ்ப்போது போற்கொண்ட குடைநிழற் றோன்றுநின் செம்மலைக் காணூஉ (கலி - 84) என்பது முதலுக்குச்சினை உவமமாக வந்தது.

உவமத்தோற்றம், வினை, பயன், மெய், உரு என்பவைபற்றி நிகழ்தலின் திணையும் பாலும் மயங்கி வருதல் இலக்கணமே என்பதும் அங்ஙனம் வருதல் வழுவமைதியாகாதென்பதும், "விரவியும் வரூஉம்" என்பதனாற் கொள்ளக்கிடந்தமையின் ஆசிரியர் அதுபற்றி விதந்து கூறாராயினார் என்க. அவை மரபுபற்றி வேண்டியவாறு வருமென அறிக.

எ டு. ;- மாரியானையின் வந்து நின்றனனே (குறு-16)
என்பது திணைபிறழ்ந்து வந்தது.

... ... ... ... ... ... " கூவற்
குராலான் படுதுயர் இரவிற்கண்ட
உயர்திணை உமைன் போலத்
துயர் பொறுக்கல்லேன் தோழி நோய்க்கே"
(குறு-232)

என்பது உயர்திணையுள் பால் பிறழ்ந்து வந்தது.

கடும்பமர் நெடுவே ளன்ன மீளி
உடம் பிடித்தடக்கை ஓடாவம்பலர் (பெரும்பாண்-75,76)

என்பது உயர்திணைக்கண் ஒருமை பன்மை பிறழ்ந்து வந்தது.

"அவ்வான், இலங்குபிறையன்ன விலங்கு வால்வை யெயிறு" என்பது அஃறிணையுள் பால் பிறழ்ந்து வந்தது. பிறவும் இவ்வாறு வருவனவற்றைக் கண்டுகொள்க.

இவ்விலக்கண நெறி நோக்காமல் இவையெல்லாம் மயங்கி வந்தன எனக்கருதிப் பேராசிரியர் இச்சூத்திரத்துள் மிகைச் சொற்கள் இல்லையாகவும் இருப்பது போல மிகைபடுத்தி அடக்குவார்.

ஒத்தல் என்பது உவமத்திற்கும் பொருளுக்கும் பொது வாகிய தன்மையையேயன்றி அப்பொருள்கள் அல்லஎன்பதைத் தேர்ந்து கொள்க.

சூ. 7. சுட்டிக்கூறா உவமமாயின்
பொருளெதிர் புணர்த்துப் புணர்ந்தன கொளவே

(தொடர்ச்சி அடுத்த இதழில்)

# சங்க இலக்கியத்தில் கல்வெட்டுச் சொற்கள்

பி. எல். சாமி, இ. அ. ப.

தென்னிந்தியக் கல்வெட்டுக்களை ஆரம்பத்தில் அறிவதற்கு முன்னோடியாக விளங்கும் 'சில முன்னாள் திருவிதாங்கூர் அரசர்கள்' என்ற புத்தகத்தில், பேராசிரியர் சுந்தரம் பிள்ளையவர்கள் தமிழில் கல்வெட்டுக்கள் பயன் படுத்தப்பட்ட வழக்காற்றினை ஆராய்ந்திருக்கிறார். எடுத்துக் காட்டாக 'ஊட்டு' என்ற சொல், பெண் தெய்வங்களைப் பெருமைப்படுத்த எடுக்கும் கிராம விருந்து என்றும், அதன் மூலம் கண்ணகி திருப்தியடைந்தாள் என்றும் விவாதித்திருக் கிறார். 'ஊட்டு' சங்க காலத்தில் இரத்தபலி என்ற பொருளில் பயன்படுத்தப் பட்டுள்ளமை அகநானூறு 142-வது பாடலால் புலனாகும். இன்றும் கூட இச்சொல், காதர் போன்ற பழங்குடி மக்களிடையே பெண் தெய்வத்திற்கு அறுவடையின் முதல் பங்காக — நிவேதனமாக — வழங்கும் 'கதிர் ஊட்டு' என்று பயன்படுத்தப்பட்டு வருகிறது. அந்தணப் புரோகிதர் களுக்கு இலவசமாக உணவு வழங்கப்படும் இடம் மலையாள மொழியில் 'ஊட்டுப்புரை' என்று வழங்குகிறது. 'பலி' என்ற வடமொழிச் சொல் தமிழில் 'ஊட்டு' என்ற மாற்றுச் சொல்வாகப் பயன்படுத்தப் பட்டிருக்கின்றது; இதனைப் பழந்தமிழில் சில இடங்களில் காணவும் முடிகிறது கல்வெட்டுக் களில் பயன்படுத்துகிற சொற்கள் புரிந்து கொள்ளக் கடினமாக இருப்பதோடல்லாமல் திருப்தியாக விளக்கவும் இயலாததாக இருக்கிறது. கல்வெட்டுக்களில் கூறப்பட்டிருக்கும் முழுமையான செய்திகள் எந்தக் சூழ்நிலையில் எவ்வாறு பயன்படுத்தப் பட்டிருக்கின்றன என்பதைச் சரியாக அறியவும், சில கல்வெட்டுக்களில் பயன்படுத்தப்பட்ட உண்மையான பொருளைத் தெரிந்து கொள்ளவும் முதலில் முயற்சி செய்தவர் தென்னக அறிஞரான பேராசிரியர் சுந்தரம் பிள்ளை ஆவார். 'பெருவுடையார்' என்ற சொல் கடவுளின் அபரிமிதமான என்று மொழி பெயர்க்கப் பட்டிருப்பதை அவர் சுட்டிக் காட்டுகிறார். ஆவணப்பதிவகம் என்ற பொருளில் 'ஆவணன் சேரி' என்ற சொல் 'அவனவன் சேரி' என்று படிக்கப்பெற்று

---

* பேராசிரியர் நா. வானமாமலை அவர்கள் நடத்திய 'ஆராய்ச்சி' ஆய்விதழ், அவர் மறைந்த பிறகு 'நா. வா. வின் ஆராய்ச்சி' என்ற பெயருடன் வெளிவந்தது மீண்டும் வெளியான முதல் இதழில் இடம் பெற்ற இக்கட்டுரை (பக். 27—34) இங்கு மறுவெளியீடு செய்யப் பெறுகிறது. நன்றி.

'ஒவ்வொருவருடைய குப்பம்' என்று விநோதமாக மொழி பெயர்க்கப் பட்டிருக்கிறது பேராசிரியர் சுந்தரம் பிள்ளை, திருவனந்தபுரம் பத்மனாப சுவாமி கோவில் 'கோபுரத்தின் தென்பக்கச் சுவரில், புரிந்து கொள்ளக் கடினமான 'ஒத்திர கடமை' 'உவ்வி' 'வேய்நெல்' போன்ற தீர்வையைக் குறிக்கும் பெயர்கள் காணக் கிடைப்பதாகக் குறிப்பிடுகிறார் ஆனால் 'ஒத்திர கடமை' என்ற சொல்லை, சேர மன்னர்களின் பாமாலையான பதிற்றுப் பத்தின் முடிவுரையில் காணக் கிடக்கும் சொல்லைக் கொண்டு விளக்க முடியும். பேராசிரியர் சுந்தரம் பிள்ளையால் குறிப்பிடப் பெற்ற 'ஒத்திர கடமை' என்ற சொல்லின் பொருளை, வேத காலத்தில் பயன் படுத்தப்பெற்ற புனிதமான 'ஒத்திரநெல்' என்ற சொல்லின் சிறப்பைப் புரிந்துகொண்டால் நன்கு விளக்கமுடியும் 'ஒத்திரபாடி' வளர்வதற்கான வரி என்ற பொருளில் 'ஒத்திரகடமை' 'ஒத்திர கடமை' என்று படிக்கப் பெறுதல் வேண்டும். மூங்கில் அரிசியைச் சேகரிப்பதற்கான தீர்வையை 'வேய்நெல்' என்ற சொல்லாக அதே கல்வெட்டில் கூறப்பட்டிருப்பதால் 'ஒத்திரகடமை' எனக்கொள்வதே சாலப் பொருந்தும் விளைந்தவுடனேயே உதிர்ந்து விடுகிற காட்டு இன வேதகால 'நீவாரா' நெல் 'ஒத்திர நெல்' ஆகும். சங்ககால அக்னி ஹோத்ரப் பிராமணர்கள், உதிர்ந்த தானியத்தை நிலத்திலிருந்து திரட்டி ஆகுதிக்குப் பயன்படுத்தி வந்தார்கள் 'ஹோத்ரா' என்பது 'ஒத்திரம்' எனச் சங்கத் தமிழில் ஆகி விட்டது 'லோத்ரா' என்ற மரத்தின் பெயர் 'லோத்திரம்' என்று ஆகிச் சங்க காலச் செய்யுள் திரட்டான ஐங்குறு நூறு 301-வது பாடலில் 'வெல்லோத்திரம்' என மரத்தின் பெயராக காணப்படுகிறது. (சேரமன்னன் செல்வக்கடுங்கோ வாழியா தன் திருமாலுக்கு அக்னிஹோத்ரம் செய்வதற்குத் தகுதியான நெல்லை விளைவிப்பதற்காக, ஒகண்டூர் என்ற கிராமத்தை தேவதானமாகக் கொடுத்தான் என்று பதிற்றுப்பத்தின் ஏழாம்பத்தின் முடிவுரை கூறுகிறது;இவ்வின நெல் ஆகுதிக்குத் தகுதியான 'இராசனம்' 'இராஜஹம்ஸா' நெல்லாக இருக்க லாம் என்று சிறந்த தமிழறிஞரான உ. வே சாமிநாதய்யர் கூறுகிறார்,மேலும் உரையாசிரியர் நச்சினார்க்கினியர் இவ்வின நெல் ஆகுதிக்குப் பயன்படாத 'மின்மினி' இரகத்தைச் சார்ந்தது என்று கூறுவதாகவும் உ. வே. சா. குறிப்பிடுகிறார். ஆனால் இவ்வகை நெல் வேதத்தால் அக்னி ஹோத்ரம் செய்யத் தகுதியானதென்று ஏற்றுக்கொள்ளப்பட்ட 'நீவாரா' நெல்லைத் தவிர வேறொன்றுமில்லை. இச்சொல் பயன்

படுத்தப் பெற்ற சூழ்நிலையைத் துரதிஷ்டவசமாகத் தமிழ் இலக்கியத்தின் சிறந்த உரையாசிரியரான நச்சினார்க்கினியரால் புரிந்துகொள்ள முடியவில்லை.

ஓர் இலட்சம் 'காணம்' நாணயங்கள் கொண்ட 'சிறுபுறம்' என்ற பணமுடிப்பை சேரமன்னன் கொடையாகக் கொடுத்தான் என்று அதே பதிகத்தில் சொல்லப்படுகிறது. 'சிறுபுறம்' என்பது 'புறவு' என்ற சங்கச் சொல்லின் பிற்கால வழக்கமாகும். மன்னனால் வேளாண்மைக்காக நிலம் கொடுக்க நிச்சயிக்கப்பட்ட தொகையே 'புறவு' எனப்படும். பதிற்றுப் பத்தின் முடிவுரையாகக் காணப்பெறுபவை பிற்காலப் பாட்டுகளாகும். புறநானூற்றின் 149, 179 வது பாடல்கள் **'புறவுக்கடன்'** என்ற நிலம் அளிக்கும் முறையைப் பற்றிக் குறிப்பிடுகின்றன. **'புறவு'** என்ற சொல் தொடக்கத்தில் 'ஆதரித்தல்' என்ற பொருளிலும் (பதிற்றுப்பத்து 18 : 9) பிறகு சங்க இலக்கிறங்களில் **'பயிரிட உகந்த நிலம்'** என்ற பொருளிலும் காணப்பெறுகின்றன. 'புறவு' என ஒரு சிறு கிராமம் வழங்கப்பட்ட விசேஷமுறை, புறநானூறு ஐந்தாவது பாட்டில் பயன்படுத்தப்பட்டிருப்பதை உரையாசிரியர் நச்சினார்க்கினியார் 'புறநானூறு' 279-வது பாடல் உரை விளக்கத்தில் மேற்கோளாக எடுத்துக்காட்டுகிறார். எனவே 'சிறுபுறம்' 'அறப்புறம்' என்ற குறிப்புகள் காணப்படுகின்றன. ஆனால் சங்க வழக்காற்றில் இடையின 'ர' கத்திற்குப் பதிலாக வல்லின 'ற' கரம் பயன்படுத்தப்பட்டது. இத்தவறான எழுத்துமுறை, கோயில் மடைப்பள்ளி செலவிற்காக வழங்கிய தர்மசொத்து என்ற பொருளில் அடுக்களைப் புறமாகவும்; அமாவாசியன்றும் விழாவிற்கு வழங்கிய அமாவாசைப் புறமாகவும்; கோயிலில் விழா எடுப்பதற்கு வழங்கிய தர்ம சொத்து என்ற பொருளில் அம்பலப் புறமாகவும்; பிற்கால கல்வெட்டுகளில் பார்க்க முடிகிறது. சங்க காலத்தில் 'புறவு' என்பது வரி உள்ள நிலமாகக் குறிப்பிடப் பெற்ற போதிலும் பிற்காலக் கல்வெட்டுகளில் வரியிலி நிலம் எனப் பயன்படுத்தப் பெற்றிருக்கிறது. பிற்காலக் கல்வெட்டுகளில் **தீர்வைக் கணக்கு** என்ற பொருளில் 'புரவவரிப் பொத்தகம்' என சங்க காலப் பொருளில் பயன்படுத்தப்பட்டிருப்பதைக் காணலாம் திணைக்களம்' என்ற சொல் கல்வெட்டுக்களில் எவ்வாறு பயன்படுத்தப் படுகிறது என்பதைப்பற்றிப் பேராசிரியர் டி. வி. மகாலிங்கம் அவர்கள் குறிப்பிடுகிறார். அவர் புறவுவரித் 'திணைக்களம்' என்பதை நிலவரித்துறை எனக் கொள்கிறார். அதிகாரம் பூர்வமான தமிழ்ச் சொல்லாக, 'ஈழத்தில் திணைக்களம்' என்ற

சொல் இன்றும் அரசுத்துறைக்குப் பயன்படுத்துவதைக் காண விந்தையாக இருக்கிறது. பாண்டிச்சேரியிலும்கூட பிரஞ்சு ஆட்சிகாலத்தில் 'வழக்கு மன்றம் விளக்கத்துறை' என அழைக்கப்பெற்றமை பிற்காலக் கல்வெட்டு பயன்படுத்தப் பெற்ற முறையாவதோடு, இச்சொல் ஈழத்திலும் சமிபகாலம் வரை பயன்படுத்தப் பெற்று வந்துள்ளது.

பதிற்றுப்பத்தில் சாதாரண மக்கள் கூட்டம் கோயில் சுற்றுப்புறங்களில் (உபவாசம்) உண்ணா நோன்பு இருக்கும் கூட்டம் **'உண்ணாப்பைஞ்நிலம்'** என்ற சொற்றொடரால் இந்நூலின் நாலாம் பத்தில் அழைக்கப்படுகிறது. 'பைந்நிலம்' என்ற சொல் உண்ணாநோன்பு நோற்கும் மக்களையும், வாழைப் பழத்தையும் குறிப்பதால், சிலேடைச் சொல்லாக விளங்குகிறது. ஆகையால், 'உண்ணாப் பைந்நிலம். மறைமுக மாக, சாப்பிடாத வாழைப்பழத்தைக் குறிப்பதாகவும் கருதலாம். இன்றைய கேரள மாநிலத்தின் தலைநகரான திருவனந்தபுரத்தில் வீற்றிருக்கும் திருமாலுக்கு (விஷ்ணுவிற்கு) உபவாசம் இருக்கும் மக்கள் செய்யும் நோன்பு என இந்தப் பாட்டின் பழைய உரையில் உரை எழுதப்பட்டிருக்கிறது. மணிஅடித்து, நீராடி, உபவாசம் இருக்கும் மக்கள் கடவுளை வழிப்பட்டனர். மறைமுகமாக, சாப்பிடாத வாழைப் பழத்தைக் குறிக்கும் 'உண்ணாப் பைந்நிலம்' என்ற செல்லினைப் பயன்படுத்தும் முறையில் விநோதமான நவீன ஒற்றுமை காணப்படுகிறது. திருச்சி மாவட்டந்தில் முசிரிக்குக் கிழக்கே இருபத்து ஐந்து கிலோமீட்டர் தொலைவில் 'திருப்பைநீலி' என்ற கிராமம் இருக்கிறது. இந்தக்கிராமத்தில் அமைந்திருக்கும் சிவன்கோயில் சுற்றுப் புறத்தில் வாழைப் பழங்கள் பயிராகின்றன. அவை நிவேதனத்திற்குப் பயன் படுத்தப்பட்ட பிறகு வீசி எறியப்படுகின்றன. சாப்பிடக்கூடாத அந்த வாழைப்பழத்தை எவராவது சாப்பிட்டால் தீராத வயிற்றுவலி வரும் என்று சொல்லப்படுகிறது. பதிற்றுப்பத்தில் நேர் பொருளாக உபவாசம் இருக்கும். மக்களையும், மறை பொருளாக வாழைப்பழத்தையும் குறிக்கும் 'திருபைஞ்ஞிலி' என்ற சொல்லாலேயே இக்கிராமம் அறியப்படுகிறது. பைஞ்ஞிலம் என்ற சொல் 'திரிசொல்' என்பதற்கு உதாரண மாக, பன்னிரண்டு அல்லது பதிமூன்றாவது நூற்றாண்டின் தமிழ் இலக்கண நூலான யாப்பருங்கலவிருத்தியில் மேற்கோள் காட்டப்பெற்றிருக்கிறது. தமிழில் ஒருசொல் இரு பொருளைக் கூறுமானால் அது 'திரிசொல்' எனப்படும். ஏறக்குறைய அது ஆங்கில மொழியின் சிலேடைபோல விளங்கு

கிறது. ஆகவே சங்க காலத்தில் பயன்படுத்தப்பட்ட 'பைஞ்ஞிலம்' என்ற பெயர் பதினொன்றாவது நூற்றாண்டி லிருந்தே அறிந்துகொள்ளப்பட்டது. திரு 'பைஞ்ஞிலி' கிராமத்தில் கடவுளுக்கு நிவேதனம் செய்து இப்போதும் சாப்பிடத்தடை விதிக்கப்பட்டிருக்கும், வாழைப்பழத்திற்கு 'பைஞ்ஞிலம்' என்ற சொல்லைப் பயன்படுத்த முடியும். கடவுளுக்கு வாழைப்பழம் நிவேதனம் செய்யும் பழக்கம் சங்க காலத்திலேயே இருந்திருக்கலாமென்றும், நிவேதனம் செய்த பழத்தைச் சாப்பிடத் தடை விதித்திருந்த வழக்கம் அந்த காலத்திலேயே இருந்ததெனவும் இதன் மூலம் ஊகிக்கலாம். கேரளக் கிராமங்களில் இன்றும் பகவதிக்கு வாழைப்பழம் நிவேதனம் செய்யப்படுகிறது. ஏழாவது பாட்டின் முடிவுரையில் சொல்லப்பட்டிருக்கும் 'காணம்' என்ற துளை யிட்ட காசினை நாணயத்தின் ஒரு பகுதியாகக் கருதலாம். 'காணம்' என்ற சொல் பிற்காலத் தமிழ் இலக்கியத்திலும், கல்வெட்டுக்களிலும் காணப்படுவது மட்டுமல்லாமல் இன்றும் பிற்கால மலையாள மொழியில் பழமொழியாகவும் காணப் படுகிறது.

பதிற்றுப்பத்தின் ஏழாம் பத்து, சேரமன்னன் செல்வக் கடுங்கோ வாழியாதனைப் பெருமைப்படுத்த கபிலர் என்ற பெருங்கவிஞரால் பாடப் பெற்றது ஆகும். கடுங்கோன் என்ற சொல், சேர மன்னனின் பெயராகக் காணப்படுவதை கிறிஸ்து சகாப்தத்தின் ஆரம்ப நூற்றாண்டைச் சார்ந்த தமிழ் பிராமி கல்வெட்டுகளிலிருந்து முதன் முதலாக ஐ. மகாதேவன் அவர்கள் கண்டுபிடித்தார்கள். சங்க இலக்கியத்தில் கூறப் பெற்றிருக்கும் மன்னர்களின் பெயரைத் தமிழ் பிராமி கல்வெட்டுகளின் சங்கேத வாசகத்திலிருந்து முதன் முதலில் சரியாக மொழி பெயர்த்த அறிஞர் ஐ. மகாதேவன் ஆவார். கள்[3]. இந்த கண்டுபிடிப்பால் சங்க இலக்கியம் கிறிஸ்து சகாப்தத்தின் துவக்க காலத்தைச் சார்ந்தது என நிரூபிக்கப் பட்டது. 'வாழியாதன்' என்ற மன்னன் பெயரில் பயன் படுத்தப் பட்டிருக்கிற 'வாழி' என்ற சொல் புதுமையான முறையில் பிற்கால கல்வெட்டுக்களிலும், இலக்கியத்திலும் நிலைத்திருக்கிறது. இச்சொல் இன்று கூட வட மலபாரில் மக்களால் பயன்படுத்தப்பெற்று நிலைபெற்றிருக்கிறது. மன்னன் என்பதற்குரிய 'கோவாழி' என்ற கலைச் சொல்லை நாம் பல்லவ கல்வெட்டுக்களின் பார்க்கிறோம் சேர மன்னன் தாணுரவியின் பத்தாவது நூற்றாண்டுக் கல்வெட்டில் நாடு வாழ்தல்' என்ற சொல் அரசனைக் குறிக்கிறது. இச்சொல்

பதிற்றுப்பத்தின், ஆறாம்பத்தின், 56வது பாட்டில், அரசர்களுக்குத் தலைவன் என்ற பொருளில் பயன்படுத்தப் பெற்ற 'வாழ்ச்சி' என்ற சொல்லைப் போன்றது. இவ்வாறு பயன் படுத்தப் பெற்ற முறையின் சிறப்புத் தன்மை, இலக்கியப் பயன்பாட்டு முறையை அறியாத சாசன வல்லுனர்களால் கவனிக்கப்படவில்லை. குறுநிலத் தலைவன் அல்லது கூட்டத் தலைவன் என்பது 'வாழி' என்ற சொல்லின் மூலப் பொருளாகும். சங்க காலத்தில் நன்னன் சேர மன்னனின் குறுநிலத் தலைவனாக இருந்து, பிறகு அரசனாக விளங்கினான். ஆனால் சேர மன்னன் நார்முடிச் சேரலால் தோற்கடிக்கப்பட்டு நன்னன் கொல்லப்பட்டான். ஏலிமலைப் பகுதியில் இருக்கும் எழில்மலையில், பத்தொன்பது நூற்றாண்டுகளுக்குப் பிறகும் நன்னன் குறுநிலத் தலைவன் என்ற பொருள் தரும் 'நாடுவாழியாக இன்றும் நினைக்கப் பெறுவதை பி. எல். சாமிதம்முடைய கள ஆய்வில் கண்டுள்ளார் கள்ளர்களின் குறுநிலத் தலைவனான திருமங்கையாழ்வார், தலைவன் என்ற பொருள் தரும் 'குறையலூர்வாழி' என்று அறியப் பெறுகின்றார்.

மெக்கன்சி தன்னுடைய கையெழுத்துப் பிரதியில் வட மலபாரின் சிரக்கல் சோவிலகத்தை, 'குருவாழ்சா' என வழங்கும் முறையைப் பார்க்கலாம் என்று குறிப்பிடுகிறார். குருவாழ்சா என்பது சங்க காலப் பதிற்றுப் பத்தில் காணப் பெறும் 'வாழ்ச்சி' என்ற சொல்லைப் போன்றதாகும். **வாழ்ச்சி என்ற சொல்லுக்குச் சிற்றரசன் அல்லது குறுநிலத் தலைவன் என்பது** பொருளாகும். சங்ககால வழக்காறுகளை மலையாளமொழி அப்படியே தவறில்லாமல் தூய்மையோடு பாதுகாக்கின்றது. (கடலால் சூழப்பட்டு, தனித்து விளங்கு வதால், பழமையான சங்க முறைகளை இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களும் பாதுகாக்கிறார்கள்.) பல்லவர் களுடையவும், மற்றயக் கல்வெட்டுக்களிலும் கிடக்கும் 'கோவிஜயா' என்ற கலப்புச் சொல், கோவாழி என்ற சொல்லைப் போன்றதாகும். சங்க கால சேரமன்னன் செல்வக் கடுங்கோ வாழியாதன் என்ற பெயரில் 'கோவாழி' என்ற சொல் உள்ளது.

புறநானூறு 193-வது பாடலைப் பாடிய கவிஞரின் பெயர் 'ஒரு கலப்பை உழவன்' என்று பொருள்படும், 'ஓரேருழவன்' என்பதாகும். இவர் எழுதிய பாடல் ஒரு தனி மனிதன் தன் ஒரு கையால் சமவெளியில் ஓடுகிற மானைப் பிடிப்பது

முடியாத காரியம் என்று குறிப்பிடுகிறது. ஆனால் ஓர் ஏரை உழுகின்ற பெயரில்லாத குடியானவனைப் பற்றிய எக்குறிப்பும் இக் கவிதையில் இல்லை. கிராமத் தலைவன் தனக்குக் கிராமத்தாரல் கொடுக்கப்படும் அணா, பணா, இண்டாணா முதலானவற்றைக் கொண்டு அனுபவிக்க வேண்டுமென்று மனு வடமொழியில் கூறியிருக்கிறார். ஆனால் பத்துக் கிராமங்களின் தலைவன் 'ஒரு குலா' அதாவது இரண்டு ஹலாவையும், இருபது கிராமங்களின் தலைவன் 'இரண்டுகுலா' வையும், நூறு கிராமங்களின் தலைவன் பத்து குலா' வையும், ஆயிரம் கிராமங்களின் தலைவன் 'நூறு குலா' வையும் முறையாக அனுபவிக்க வேண்டும். ஓர் ஏரால் ஓராண்டு உழக் கூடிய நிவத்தின் அளவு ஒரு 'ஹலா' ஆகும். பிராகிருதமும், வடமொழிச் சாசனங்களும் ஒரு கலப்பையின் நில அளவை 'நிவர்த்தனா' என்றும், 'புட்டிகா' என்றும் குறிப்பிடுகின்றன. 'ஒரு கலப்பை நிலம்' என்பதைக் குறிப்பிட்ட அளவு நிலம் இரண்டு காளைகள் பூட்டிய ஒரு கலப்பையால், குறிபிட்ட காலத்தில் பயிரிடக் கூடியது என்று 'ஹலஸத ஸஹஸ்ரா' (நூறு ஆயிரம் கலப்பைகள் நிலம்) என்ற சொல்லால் ஹிரிஹத ஹல்லிப் பல்லவர் செப்பேடு குறிப்பிடுகிறது. 'ஒரு கலப்பை உழவன்' என்ற கூறின் பெயர், ஒரு கலப்பையால், கொடுக்கப்பட்ட கால அளவில் குறிப்பிட்ட அளவு நிலத்தை வேளாண்மை செய்பவன் என்று பொருள் தரும் சொல்லாகும். சங்க காலத்திலேயே இருந்துவந்த இப்பயன்பாட்டு முறையையே பல்லவர்கள் கடைப்பிடித்தார்கள். பிற்காலத் தமிழ் அகராதி 'நிவர்த்தனம்' என்பது இருபத்து ஐந்திலிருந்து நூறு அல்லது இருநூற்றி ஐம்பது சதுர முழம் என்றும் புட்டி (புட்டிகா) என்பது ஒன்றரை ஏக்கரிலிருந்து எட்டு ஏக்கர் என்றும் விளக்கம் தந்துள்ளது. எஸ் சி. சிர்காரும் 'ஹலவாலா' என்பதை நில அளவு என்று குறிப்பிடுகிறார். சாதாரண உழவனின் சொல்லான 'பாறு' என்பதற்கு, ஒரு காளை பூட்டிய ஒரு கலப்பையால் ஒரு நாளில் உழக் கூடிய நிலம் என வின்ஸ்லோவின் நிகண்டு பொருள் தருகிறது. சிறிய அளவு நிலத்தை இரண்டு காளைகள் பூட்டிய ஒரு கலப்பையால் ஒரு நாளில் உழும் உழவனை 'ஒரே ருழவனார்' எனத் தெளிவாகச் சங்க கால இலக்கியம் கூறுகிறது. தஞ்சை மாவட்டத்தில் இன்றும் ஓர் ஏரால் உழமுடிகிற நிலம் 'ஓர் ஏர் நிலம்' என்று அழைக்கப்படுகிறது. இந்நிலத்தின் பரப்பு சுமாராக ஏழு 'மா' என்கிற $2\frac{1}{3}$ ஏக்கர் என ஒப்புக்கொள்ளப் பட்டுள்ளது. சங்க கால வழக்காறு மற்றொரு வடிவத்தில்

பத்தொன்பதாவது நூற்றாண்டு வரை இவ்வாறாக நிலைத்திலிருந்தது என்பதை இங்கு சுட்டிக் காட்டலாம். சங்க காலத்திலும், பிற்காலத்திலும் 'ஓர்' என்பது அளவையின் ஒரு சிறிய அலகு என்ற பொருளில் பயன்படுத்தப் பெற்றது குறிப்பிடத்தக்கது ஆகும். 'ஓரடை' ஓரேடை' என்ற அளவைச் சொற்கள் நில அளவையின் சிறிய பகுதிக்குப் பயன்படுத்துகிற வழக்கத்தைப் பிற்காலத் தமிழ் அகராதிகள் எடுத்துக் காட்டாகக் கூறுகின்றன. ஓரில் பிச்சையார் என்பதும் சங்கக் கவிஞருள் ஒருவரின் பெயராகும் (குறுந்தொகை 277) அச்சொல் இலக்கிய மரபில் ஒரு வீட்டுப் பிச்சைக்காரன் எனப் பொருள்படுகிறது. ஆனால் அப் பெயரை ஒரு வீட்டிலிருந்து மட்டும் வரையறுக்கப்பட்ட முறையிலே, பிச்சை எடுக்கும் பிச்சைக்காரன் என்று கூறியிருக்கலாம். ஒரு வீட்டிலிருந்து மட்டும் நெய்ச்சோற்றினை உணவாகப் பெற்ற ஞானி, ஆதலால் அறிவன் என்ற சொல்லால் அழைக்கப் பெற்றுள்ளான். (எனவே அவன் ஒரு ஜைன பிட்சுவாக — பக்கிரியாக — இருக்கலாம்.) பாட்டில் பயன்படுத்தப் பெற்ற ஓரில் பிச்சையார் என்ற தொடராலேயே அப்பாட்டினைப் பாடிய கவிஞரும் 'ஓரில் பிச்சையார்[3] என்று அழைக்கப்பெற்றுள்ளார்.

ஒன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த கோபாலதேவன் என்ற பல்லவ மன்னன், ஹஸ்திபுர கன்னட கல்வெட்டுக்களில் 'கோலகுப்பா' 'ஜீவஸி' 'கார்ஸபிண்டா' 'கெம்பகரோடம்' போன்ற வணிகப் பெயர்கள் குறிப்பிடப்படுகின்றன இப் பொருட்களின் பெயர்களை சங்கேத வாசகத்திலிருந்து மொழி பெயர்ப்பது கடினம் ஆகும் எனவே இக் கலைச் சொற்களுக்கு எந்தக் கல்வெட்டு நிபுணர்களும் விளக்கம் கொடுக்க வில்லை. ஆனால் அதிர்ஷ்டவசமாக சங்க இலக்கியம் 'கெம்பகரோடம்' என்ற சொல்லுக்கு விளக்கம் தருகிறது. சங்கப் பாடல்கள் (அகம் 1, 136) கறோடன்' என்ற சொல்லுக்குப் பட்டைக் கல் உற்பத்தி செய்யும் தொழிலில் ஈடுபட்டிருக்கும் கலைஞன் என்று கூறுகின்றன. வட மலபார் அரசனான நன்னனின் எழில் மலையிலும் பழநிமலையிலும் பட்டைக் கற்கள் உற்பத்தி செய்யப் பெறுகின்றன. கிறிஸ்துவ சகாப்தத்தின் தொடக்கத்தில் மேலை நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப் பெற்ற குறைந்த மதிப்புள்ள கற்களான 'குறந்தம்' என்ற தமிழ்ச் சொல்லிலிருந்து 'கொறுண்டம்' என்ற சொல் பெறப்புட்டதாகும். தென் கன்னட அரசாங்க அறிக்கையும் இவ்வகைக் கற்கள் கிடைப்பதைக் குறிப்பிடுகிறது. 'கடன்டேல்'

என்ற கிராமம் கன்னடத்தில் ஆரம்பத்தில் 'கடன்டகல்லு' (அரவைக்கல்) என்று அறியப்படவும், பிற்காலத்தில் 'கடன்டேல்' என்று மருவியதாகவும் தோன்றுகிறது. அரசாங்க அறிக்கையும் தென் கன்னடப்பகுதியில் சாதாரணமாகக் கூழாங்கல்லுடன் கலந்து வடிவமற்ற படிகங்களான கொறுண்டம் கற்கள் கிடைப்பதாகக் கூறுகிறது. வட மலபார் குறுநிலத் தலைவனும், அரசனுமான நன்னன் தென் கன்னடப் பகுதியையும் ஆட்சி செய்தான். பெண்ணினத்திற்கு நன்னனால் இழைக்கப் பெற்ற அநீதிகள் சங்கப் பாடலான குறுந்தொகை 192-வது பாடலில் குறிப்பிடப் படுவது போல இப்போதும் கூட சமகால உள்ளூர் நாட்டுப்புறப் பாடல்களில் குறிப்பிடப்படுகின்றன. பரம்பரைப் பழக்கங்கள் எளிதில் மறைவதில்லை. எனவே, பல்வேறு அறிவுத்துறை களை இணைத்து ஆராய்ந்து பார்க்காமல் பாரம்பர்யத்தை எளிதில் புறக்கணிக்கவும் கூடாது. நன்னனின் 'பாறம்' என்ற மலைப்பகுதியில் 'கொறுண்டம்' கற்கள் மிகுதியாகக் காணப் படுகின்றன. அங்கு அவை அதிகமாக உற்பத்தி செய்யப் படுகின்றன என்பது அகம் முதல் பாடலிலும் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. வெள்ளைக் குந்தரிக்க மரத்திலிருந்து கிடைக்கும் ஒருவகைப் 'பயின்' என்ற பிசின் அல்லது அரக்கால் படிகத் துண்டுகள் ஒன்று சேர்க்கப்பட்டு, 'கொறுண்டம்' கற்கள் உற்பத்தி செய்யப்பட்டன என்று இப்பாடல் (அகம்) குறிப்பிடுகிறது. வாசமுள்ள மலருடைய மரம் என்று குறிஞ்சிப் பாட்டு இம் மரத்தைக் குறிப்பிடுகிறது. பட்டைக் கற்களின் இணைப்பு இளம் காதலர்களின் பிணைப்பினைப் போன்றது. இளம் காதலர்களும் தங்களுடைய பிணைப்பு துண்டுகள் ஒன்று சேர்க்கப் பெற்ற கொறுண்டம் கற்களின் பலத்தைப் போலத் தீவிரமாக இருக்க வேண்டுமென விரும்புகிறார்கள். கொறுண்டம் கற்கள் 'கறோடம்' என்றும் அதனை உற்பத்தி செய்பவனை 'கறோடன்' என்றும் சங்க இலக்கியம் கூறுகிறது 'கெம்பகறோடம்' என்ற கன்னடச் சொல்லுக்கு சிவப்பு கறோடக்கல் என்று பொருள் கொள்ளலாம். தென் கன்னடப் பகுதி நன்னனுடைய ஆட்சிப்பகுதியாகவும். சேரர்களுடைய ஆட்சிப்பகுதியாகவும் சங்க காலத்தில் இருந்ததால் தமிழ் வணிகப் பெயர் 'கறோடம், கன்னடக் கல்வெட்டுக்களில் பயன் படுத்தப் பெற்றது. கிறிஸ்தவ சகாப்தத்தின் தொடக்கத்தில் இக் 'கறோடம்' கல் மேலைநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யபட்டதாகப் பிளினீயும் கூறுகிறார் என்பது இங்கு குறிப்பிடப்பட வேண்டும் 'கோலகுப்பா' என்ற சொல்

கூட **கோல குப்பையாகவும்** பிற்காலத் தமிழ் இலக்கண உரையிலிருந்து வணிகப் பொருளாகக் குறிப்பிடப் பெறும் 'கொள்ளு' என்றும் கொள்ளலாம் 'நெல் குப்பை' நெல் வாணியத்தைக் குறிக்கிறது.

பிற்கால பல தமிழ்க் கல்வெட்டுக்களின் வழக்காறு சங்க இலக்கியத்தின் அடியொற்றியே வந்துள்ளது. அவை பற்றிய கல்வி பயன்தரக் கூடியதாகவும், அறை கூவல் விடத் தக்கதாகவும் அமையும். பொதுவாகத் தமிழ்க் கல்வெட்டு வழக்காறு பல்லவர்கள் காலத்தில் தொடங்கியது என்பது தவறாகும்; ஏனென்றால் சங்க காலத்திலேயே இம் முறைகள் இருந்துள்ளன. அவற்றுள் சில பிற்காலத்தில் பல்லவர்களாலும், சோழர்களாலும், ஏன் விஜயநகர அரசர்களாலும் கூட எடுத்தாளப்பட்டது.

[தமிழாக்கம் :- **கே. தர்மராஜன், எம். ஏ.,**]

## குறிப்புகள்

1. நிச்சயிக்கப் பெற்ற சிறு தொகையும், நிலவரியாகக் கொடுப்பதற்கேற்ற விளைச்சல் இல்லாத நிறத்தைப் 'புறவு' என்ற சொல்லால் 330-வது புறநானூற்றுப் பாடல் தெளிவாகக் குறிப்பிடுகிறது அதே 'புறவு' என்ற சொல் தமிழ் நாட்டின் தென்பகுதியில் வறண்ட நிலம் என்ற பொருளில் வழக்காக உள்ளதை புறநானூறு 297-வது பாடலில் பயன்படுத்தப் பெற்றிப்பதைக் காணலாம்.

2. Professor T. V. Mahalingam — South Indian Polity.

3. Tamil — Brahmi Inscriptions — I. Mahadevan, Tamil Nadu Archaeological Society.

4. Machenzies Manuscripts—edited by T. V.Mahalingam, Madras University.

5. Dr. D. C. Sircar — Indian Epigraphical glossary.

6. Copper plate inscriptions of Pallavas (Tamil) — Tamil Nadu Archaeological Society.

## முள்ளங்கி சாப்பிடுவோம்

முள்ளங்கி ஒரு சத்துள்ள உணவுப்பொருளாகும் 100 கிராம் முள்ளங்கி கீழ்க்கண்ட சத்துக்களைக்கொண்டிருக்கிறது.

| | | | |
|---|---|---|---|
| புரதம் | — 0.7% | இரும்புச்சத்து | — 0.05% |
| கொழுப்பு | — 0.1% | வைட்டமின் 'ஏ' | — 3 மி. கி. |
| மாவுச்சத்து | — 4.2% | வைட்டமின் 'பி' | — 60 மி. கி. |
| சுண்ணாம்புச் சத்து | — 0.5% | வைட்டமின் 'சி' | — 17 மி. கி. |

மலச்சிக்கல், குடல்புண், ஆகியவற்றுக்கு முள்ளங்கி நல்லது; வெறும் வயிற்றில் இதைச் சாப்பிட்டால், அதிகமாகச் சுரக்கும் அமிலத்தைக் குணப்படுத்துகிறது. பசியைத் தூண்டுகிறது. பெண்கள் மாதவிடாய்ச் சமயத்தில் இதைச் சாப்பிட்டால், வேதனை குறையும். இதன் எண்ணெய் கலந்து சில நாட்டு மருந்துகள் தயாரிக்கப்படுகின்றன.

பழமையான கிழங்கு வகைகளில் முள்ளங்கியும் ஒன்று. கி. மு. 2700-இல் எகிப்தில் இது விளைந்ததாக ஒரு வரலாற்றுக் குறிப்பு மூலம் தெரிகிறது, பழைய கிரேக்கம், சீனம், சப்பான் நாடுகளிலும் பயிராக இந்தக் கிழக்கைப்பற்றி நமது ரிக்வேதமும் குறிப்பிடுகிறது.

*"நன்றி, அறிவியல் பண்ணை, தமிழ்ப் பல்கலைக் கழகம்."*

## கரப்பான் பூச்சியைக்கொல்லச் சோப்புத் தண்ணீர்

கரப்பான், சிள்வண்டுப் பூச்சிகளின் தொல்லை தாங்க முடியவில்லையா? 0.5 கிராம் சோப்புத் துண்டை 100 மி. நீரில் கலந்து, இந்தப் பூச்சிகளின்மீது தெளித்தால் அவை இறந்துவிடும். பெரிய கரப்பான் பூச்சிகளைக்கொல்ல 2 கிராம் சோப்புத்துண்டை 10.மி. நீரில் கலந்து தெளிக்கவேண்டும். இந்தப் பூச்சிகளின் சுவாச மண்டலத்தில் இந்தச் சோப்புத் தண்ணீர் ஒருவிதப் சோப்புப் படலத்தை (Soap film) உண்டு பண்ணுவதால், அவை மூச்சு திணறி இறந்துவிடுகின்றன. நமது வீடுகளில் இந்தப் பூச்சிகள் வசிக்கும் துவாரங்களில் இந்த நீரை ஊற்றினாலும் அவற்றின் உற்பத்தி பாதிக்கப்படும் என்றும் சோதித்தறிந்துள்ளனர் கோழிக்கோடு, நீர்வளத்துறையைச் சார்ந்த அறிவியல் அறிஞர்கள்.

இதேபோல, தேநீர், காபி, கோகோ முதலியவற்றிலுள்ள 'காபின்' என்ற நச்சுப்பொருளும் நல்லதொரு பூச்சிக்கொல்லி மருந்தாகும் என ஹார்வாடு நரம்பியல் நிபுணர் ஜேம்ஸ் நாதுஷன் கூறுகிறார்.

*"நன்றி அறிவியல் பண்ணை தமிழ்ப்பல்கலைக்கழகம்"*

## கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடுகள்

| | | |
|---|---|---|
| யாழ் நூல் — விபுலானந்த அடிகள் | ரூ | 50 00 |
| கட்டுரைப் பொழில் (சங்க மணிவிழா மலர்) | ரூ. | 30 00 |
| கட்டுரைப் பூங்கா (தமிழவேள் த. வே. உமாமகேசுவரனார் நூற்றாண்டு நினைவு வெளியீடு) | ரூ. | 60 00 |
| இராசராச சோழன் முடிசூடிய 1000 ஆவது ஆண்டு விழா நினைவுச் சிறப்பிதழ் | ரூ. | 6 00 |
| கபிலர் - நாவலர் ந மு. வேங்கடசாமி நாட்டார் | ரூ | 4 00 |
| நக்கீரர் - நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார் | ரூ. | 3 00 |
| மெய்ஞ்ஞானத்தின் கொலுவிருக்கையில் அஞ்ஞானத்தின் வழக்கீடு - பா வே. மாணிக்க நாயக்கர் | ரூ. | 2 00 |
| கவியரசு நினைவு மலர் | ரூ. | 1 00 |
| தமிழரசி குறவஞ்சி | ரூ | 0 62 |
| சிவமும் செந்தமிழும்-பாவலர் ச. பாலசுந்தரம் | ரூ | 0 25 |

### பிற வெளியீடுகள் :

| | | |
|---|---|---|
| கரந்தைக் கோவை (அகப்பொருட் கோவை நூல்) பேராசிரியர் ச. பாலசுந்தரம் | | 7 50 |
| கலைக்கூத்தன் கவிதைகள் | ரூ. | 6 00 |

நூல்கட்குக் கழிவு 20% தரப்பெறும். அஞ்சற் செலவு தனி.
நூல்கள் வேண்டுவோர் கீழ்வரும் முகவரிக்கு எழுதுக.

தலைவர்,
கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
தஞ்சாவூர்-613002.

## தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்-613 001.

தமிழ்நாடு, இந்தியா

### தமிழ்ப் பல்கலைக் கழகப் புதிய வெளியீடுகள்

1. Tamil Literature — உரு. 85/—
   — Prof. M. S. Purnalingam Pillai — U.S $ 17

2. மொழி நூல்
   —மாகறல் கார்த்திகேய முதலியார் — உரு. 75—

3. Tamil University Machine Translation System (TUMTS) — Rs. 75/— U.S.$ 15
   Co-authors : K. C. Chellamuthu K. Rangan K. Murugesan

4. A Study on the Thanjavur Art Plate — Rs. 60/—
   — Prof. P. Saravanavel — U,S.$ 12

5. நாமதீப நிகண்டு — உரு. 68—
   —கல்லிடைநகர் சிவசுப்பிரமணியக் கவிராயர்

6. மொழி நூற் கொள்கையும் தமிழ்மொழி அமைப்பும் — உரு. 45/—
   — பேரா. கா. சுப்ரமணியப் பிள்ளை

7. Indians in South Africa — Rs. 60.—
   — Prof. K. Nambi Arooran — U.S.$ 12

விற்பனைக் கழிவு: அஞ்சல் வழி 25%
நேரில் 30%
அஞ்சல் செலவு தனி
பேராசிரியர் ஆய்வாளர்களுக்கு 40%
விற்பனையாளர்களுக்குப் பெறும்படிகளுக்கு ஏற்ப கழிவு உண்டு.

தொடர்பு கொள்க:- பதிப்புத்துறை இயக்குநர்,
தமிழ்ப் பல்கலைக் கழகம்,
தஞ்சாவூர் - 613 001.

## பதிப்பாசிரியர் குழு

திரு. ச. இராமநாதன்,
தலைவர், கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சாவூர்-2.

பேராசிரியர். க. வெள்ளைவாரணன்,
142, கனகசபை நகர், சிதம்பரம்.

சிலம்பொலி சு. செல்லப்பன், எம். ஏ., பி. டி., பி. எல்.,
இயக்குநர், தமிழ் வளர்ச்சித்துறை, சென்னை.

டாக்டர் தமிழண்ணல், எம். ஏ., பிஎச். டி.,
தலைவர், தமிழ்த்துறை, மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம்.

டாக்டர். சி. பாலசுப்பிரமணியன்,
எம். ஏ., எம்.லிட், பிஎச். டி.,
தலைவர், தமிழ் மொழித்துறை, சென்னைப் பல்கலைக் கழகம்.

பேராசிரியர் பி. விருத்தாசலம், எம். ஏ.,
முதல்வர், கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர்-2

பேராசிரியர் சி. கோவிந்தராசன்,
மதுரைக் காமராசர் பல்கலைக் கழகம்.

புலவர் ஆ. பாலன், எம். ஏ.,
துணை முதல்வர், கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர்-2

புலவர். மீனா. இராமதாசு, எம். ஏ.,
தலைமைத் தமிழாசிரியர்,
உமாமகேசுவரச மேனிலைப் பள்ளி, தஞ்சாவூர்-2.

திரு பா. மதிவாணன், எம். ஏ., எம்.பில்.,
துணைப்பேராசிரியர், கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர்-2

பதிப்பாசிரியர்

பேராசிரியர் ச. பாலசுந்தரம்

Regd. No. TN/TJ/17.

நூல்-அஞ்சல்

பெறுநர்

திருமிகு ..................

11. The Curator,
Govt. Oriental Manuscripts Library,
M a d r a s. 600 005

ஆசிரியர்,
தமிழ்ப்பொழில்,
கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
தஞ்சாவூர் - 613 002.

**தமிழ்ப் பொழில் கட்டணம்**

| | | உள்நாடு | | வெளிநாடு | |
|---|---|---|---|---|---|
| தனியிதழ் | ரூ. | 2 | 50 | 3 | 00 |
| ஆண்டுக் கட்டணம் | ரூ. | 25 | 00 | 60 | 00 |
| வாழ்நாள் கட்டணம் | ரூ. | 250 | 00 | 600 | 00 |

வெளியிடுபவர் : திரு. ச. இராமநாதன், தலைவர் கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
கருந்திட்டைக்குடி, தஞ்சாவூர்-613 002.
அச்சிடுபவர் திரு. M. சந்திரமௌலி,
ஜெமினி அச்சகம், 1837/1, மேலராசவீதி,
தஞ்சாவூர் - 613 009.